பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 221

ஞாயிற்றுக்கிழமை
06 ஜூலை 2025

ஆனி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வடமாகாண கடற்பரப்பில் கடும் காற்று

கொழும்பு, ஜூலை 6
வடக்குக் கடற்பரப்பில் கடும் காற்றுடனான காலநிலை காணப்படும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
ஊவா மாகாணத்தின் சில இடங்களிலும் 15



பேராசிரியர் ராஜ்சோமதேவ சந்தேகித்த

# புதிய புதைகுழியிலும் மனிதச் சிதிலங்கள்!

### அதிர்ச்சி மேல் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 6
செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு அருகாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட புதிய புதைகுழியில் இருந்தும் மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. 15

செம்மணிப் புதைகுழியில்

## 3 மனிதச் சிதிலங்கள் நேற்று அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது மூன்று என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இத்துடன் செம்மணி மனிதப் புதைகுழியில் இது 15

## செம்மணிப் புதைகுழியில் சிறிய கொள்கலன் மீட்பு!

இராணுவப் பயன்பாட்டுக்குரியது என துறைசார் அதிகாரிகள் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து சிறிய கொள்கலனொன்று மீட்கப்பட்டுள்ளது. வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அழைக்கப்பட்டு இந்த மீட்பு நடவடிக்கை இடம் பெற்றது. 15



## செம்மணிப் புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டும்!

வலியுறுத்தி இந்தியாவில் போராட்டம்

சென்னை, ஜூலை 6
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி, நாம் தமிழர் கட்சியின் ஏற்பாட்டில் தமிழகத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
செம்மணிக்கு 15

## ஜூனில் மட்டும் 138,241 சுற்றுலாவிகள்!

கொழும்பு, ஜூலை 6
ஜூன் மாதம் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 241 சுற்றுலாவிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என்று இலங்கை 15

## மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் அரசு துரிதம்!

விரிவு பக்கம் 07






பூச்சந்தி புராணி

'இப்பிடி எல்லாப்பக்கமும் குரலெழுப்பினாலாவது நீதி கிடைக்குதோ எண்டு பாப்பம்'

## கிருமித்தொற்றால் சிறுமி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
கிருமித் தொற்றுக் காரணமாக, சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.
பூநகரிப் பகுதியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் தரணிகா (வயது-16) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கண்ணில் ஏற்பட்ட நோய்க்கு கடந்த மாதம் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட் 15

பேருந்து செலுத்தும்போது தலைச்சுற்று

## சாரதியின் சாதுர்யத்தால் அசம்பாவிதம் தவிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 6
பேருந்தை செலுத்திக் கொண்டிருந்த இ.போ.ச. சாரதி திடீர் சுகவீனமடைந்த போதும், அவருடைய சாதுரியமான செயற்பாடு காரணமாக பெரும் அசம்பாவிதம் 15



சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 05.07.2025 | திகதி 05.07.2025 | திகதி 05.07.2025 | திகதி 05.07.2025 | திகதி 05.07.2025 | திகதி 05.07.2025 | திகதி 05.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4123 | சீட்டிழுப்பு இலக்கம் 1190 | சீட்டிழுப்பு இலக்கம் 0149 | சீட்டிழுப்பு இலக்கம் 2228 | சீட்டிழுப்பு இலக்கம் 5881 | சீட்டிழுப்பு இலக்கம் 1911 | சீட்டிழுப்பு இலக்கம் 0456 |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கினம் சிம்மம் | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து V |
| | | | சுப்பர் இலக்கம் 26 | | | |
| வெற்றி இலக்கங்கள் 19 50 53 80 | வெற்றி இலக்கங்கள் 02 03 08 12 | வெற்றி இலக்கங்கள் 4 3 9 6 | வெற்றி இலக்கங்கள் 05 32 62 68 | வெற்றி இலக்கங்கள் 0 8 1 8 3 4 | வெற்றி இலக்கங்கள் -46 48 64 75 | வெற்றி இலக்கங்கள் 1 8 3 4 |
| விசேட எழுத்து T | | | | | விசேட எழுத்து Q | |

# புதிய சீர்திருத்தத்துக்குள் தொழிற்கல்விப் பாடம்

## பிரதமர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 6**

**2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதென தீர்மானித்திருக்கும் புதியக் கல்விச் சீர்திருத்தங்களுக்குள் பாடசாலை மூலமான தீர்க்கமான பாடமாக தொழிற்கல்வியை மாற்ற உள்ளதாக கல்வியமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடு தழுவிய தொழிற்கல்வி நிறுவனங்களை மையமாக வைத்து நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைப் படிப்பை முடித்து, பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முடியவில்லை என்றால் செல்லக்கூடிய ஒரு மாற்று இடமாகவே தற்போதும் தொழில்நுட்பக் கல்லூரிச் சமூகத்தால் பார்க்கப்படுகின்றது என்பதையும், அல்லது மற்றத் தேர்வுகள் அனைத்தையும் மேற்கொண்டு அவை கைகூடவில்லை என்றால் இறுதியில் வந்து விழும் இடமாகவே இது கருதப்பட்டு வருகின்றது. இது மிகவும் தவறானதாகும். தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் முக்கியமான,

புத்திசாலித்தனமான, நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானதொரு முடிவாகும்.

அதனாலேயே நாம் 2026 இல் நடைமுறைப்படுத்துவதென தீர்மானித்திருக்கும் புதியக் கல்விச் சீர்திருத்தங்களுக்குள் தொழிற்கல்விக்கு சிறப்பான இடத்தை ஒதுக்கி இருக்கின்றோம்.

பாடசாலைக் கல்வியின்மூலமே தொழிற்கல்வியை வழங்க நாம் திட்டமிட்டுள்ளோம். அதன் மூலம் அரசு எதிர்பார்க்கும் மறுமலர்ச்சி யுகத்துக்குத் தேவையான மனித வளத்தை உருவாக்க, அந்த மனித வளத்தை மேம்படுத்த நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் - என்றார். (ச-26)





# அமெரிக்காவுடனான ஒப்பந்தம் அடுத்தவாரம் சமர்ப்பிப்பு

## பிரதியமைச்சர் அனில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

எதிர்வரும் 9ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் அமெரிக்கா பரஸ்பர வரிகளை விதிக்கவுள்ள நிலையில், அதற்கு முன்னர் சாதகமான தீர்வு குறித்து இருதரப்பு ஒப்பந்தம் நாட்டுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று தொழிலாளர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுதொடர்பான சுங்க வரிகள் குறித்து இலங்கை அமெரிக்காவுடன் இரண்டு கட்டப் பேச்சுகளை நடத்தியுள்ளது. இதில் ஆசியப் பிராந்தியத்தில் இலங்கை அதிக முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

அத்துடன், அமெரிக்காவுடனான வர்த்தகம் ஏற்றுமதிச் சந்தைக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தாமல், மேலும் வர்த்தக முதலீடுகள் மற்றும் புதிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவும் முடியும் - என்றார்.

இதேவேளை அண்மையில் ஜனாதிபதி ட்ரம்ப், இலங்கை உட்பட பல நாடுகளுக்கான 90 நாள் சுங்க வரிச்சலுகை அடுத்த வாரம் முடிவடைகின்றது. அதனை நீடிக்கத் திட்டமிடவில்லை என்றும், அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யாத நாடுகளுக்கு வர்த்தகத் தடைகள் விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# அஸ்வெசும விண்ணப்பம் மன்னாரிலிருந்து குறைவு



கொழும்பு, ஜூலை 6

அஸ்வெசும இரண்டாம் கட்டக் கணக்கெடுப்புப் பணியில் மன்னார் மாவட்டத்திலிருந்தே குறைந்த எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் மன்னார் மாவட்டத்தில் அதீத வறிய மற்றும் வறிய குடும்பங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகப் பதிவாகியுள்ளது என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 815,556 விண்ணப்பங்களில் 717,309 விண்ணப்பங்களுக்கு குழு அனுமதி கிடைத்துள்ளது.

தகுதிவாய்ந்த பயனாளிகள் பிரிவில் 82,996 அதீத வறிய குடும்பங்களும், 147,298 வறிய குடும்பங்களும், 69,238 பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களும் உள்ளன.

பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான அதீத வறிய குடும்பங்கள் உள்ளன. இந்த எண்ணிக்கை முறையே 13,298 மற்றும் 13,018 ஆகப் பதிவாகியுள்ளது.

அதிக எண்ணிக்கையில் 59,079 விண்ணப்பங்கள் நுவரெலியா மாவட்டத்திலிருந்தும், மிகக் குறைந்த எண்ணிக்கையில் 3,493 விண்ணப்பங்கள் மன்னார் மாவட்டத்திலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 05.07.2025 | தினம் சனிக்கிழமை | வெற்றி வாரம் 0589 |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 9 3 2 4 0 9 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 05.07.2025 | தினம் சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2855 | ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 09 27 72 73 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 05.07.2025 | தினம் சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 31 72 79 80 | வெற்றி வாரம் 5016 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி 05.07.2025 | தினம் சனிக்கிழமை | |
| வெற்றி வாரம் 0719 | வெற்றி இலக்கம் 24 26 36 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 05.07.2025 | தினம் சனிக்கிழமை | |
| மேஷம் | வெற்றி இலக்கம் 13 21 33 51 | சீட்டிழுப்பு வாரம் 4567 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 05.07.2025 | தினம் சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து D | சுப்பர் இலக்கம் 37 | வெற்றி இலக்கம் 07 20 39 40 | வெற்றி வாரம் 2031 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 05.07.2025 | தினம் சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 13 38 48 74 | வெற்றி வாரம் 2681 |

# பிரதமராக ஹரிணியே தொடர்ந்தும் இருப்பார்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

ஹரிணி அமரசூரிய பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்படமாட்டார். எனக்கும் பிரதமராகும் ஆசை இல்லை என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஹரிணி அமரசூரிய பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, விஜித ஹேரத் பிரதமராக நியமிக்கப்படவுள்ளார் என்று வெளியாகும் தகவல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

என்னைப் பிரதமராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று சில ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. நாம் அனைவரும் இணங்கியே ஹரிணி அமரசூரியவைப் பிரதமராக நியமித்தோம்.

வங்குரோத்து அடைந்த அரசியற்கட்சிகளே இவ்வாறான கதைகளைக்கட்டித் தற்காலிகமாகச் சந்தோசமடைகின்றன. நாம் தெளிவாக இருக்கின்றோம். மிகவும் பொறுப்புடன் பதவிகளைப் பிரித்து வழங்கி பணிகளை மேற்கொண்டுள்ளோம். பதவி என்பது எமது இலக்கல்ல. நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது இலக்கு. அந்த இலக்கை அடைவதற்கான ஆயுதமே நாம் வகிக்கும் அமைச்சுப் பதவிகள் - என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனங்களப்பில் முளைக்கும் உப்பளம் தென்மராட்சி நிலத்தடி நீருக்குப் பாதிப்பு!

பிரதேசசபை, நகரசபை எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

சாவகச்சேரி தனங்கிளப்பு அறுகுவெளிப் பகுதியில் உப்பளம் அமைக்கும் சட்டவிரோத செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதனால் தென்மராட்சியின் நிலத்தடி நீர்வளம் பாதிக்கக்கூடிய அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளது என்று சாவகச்சேரிப் பிரதேசசபை மற்றும் நகரசபை என்பன எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

குறித்த உப்பளத்தால் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அறிந்த சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் செ.மயூரன், சாவகச்சேரிப் நகரசபை உபதவிசாளரோடு உப்பளத்துக்குச் சென்று களநிலைமைகளை ஆராய்ந்தார்.


அதன்பின்னர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலிருந்த உப்பளமே மீண்டும் திடீரென இயங்குநிலைக்கு வந்துள்ளது. குறித்த உப்பளத்தால் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அறுகுவெளிக் கடல் நீரேரியில் இருந்தே உப்பு உற்பத்திக்கான நீர் எடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறில்லாது சட்டவிரோதமாக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு உப்பு உற்பத்தி பாத்திகளுக்கு நீர் இறைப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் தென்மராட்சியின் நிலத்தடி நீர்வளம் பாதிக்கக்கூடிய அபாயகரமானநிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு உப்பளம் அமைப்பதற்குச் சாவகச்சேரிப் பிரதேசசபையின் அனுமதியும் பெறப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்- என்றனர். (ச-28, 27)

ராஜ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை அடகு சேவை
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது
1 பவுண் 22 கரட்டிற்கு
220000/-
அடகுக்காலம் ஒரு வருடம்
இல. 59 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287, 076 636 1238



சாவகச்சேரி நகர் வாரிவனநாதர் சிவன் கோவில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா அண்மையில் அடியார்கள் புடைசூழ இடம்பெற்றது. (ச-9)



# நல்லூர் திண்மக்கழிவுகள் மீள்சுழற்சிப்பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

நல்லூர்ப் பிரதேசசபையின் திண்மக் கழிவுப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாணும் முகமாக ஆரம்ப கட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரனின் நேரடிக் கண்காணிப்பில் தற்போது யாழ். அரியாலையில் திண்மக்கழிவுகளை மீள்சுழற்சி மற்றும் உரம் தயாரிப்பு செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி செயற்பாடுகளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன், பிரதேசசபையின் உப தவிசாளர் இ.ஜெயகரன், யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், நல்லூர்ப் பிரதேசசபைத் தவிசாளரின் பிரத்தியேகச் செயலாளர் வ.பார்த்திபன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (ச-66)




# சர்வதேசக் கூட்டுறவு தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் 103 ஆவது சர்வதேசக் கூட்டுறவு தின நிகழ்வுகள் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கூட்டுறவுப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.லிங்கநாதன், யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன், கூட்டுறவுச் சங்க அதிகாரிகள், கூட்டுறவாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். தொடர்ந்து கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன. (ச-17-27)



# பருத்தித்துறையில் வாகனம் தடம்புரள்வு

யாழ்ப்பாணம், ஜூலை 6

பருத்தித்துறை பிரதான வீதியின் உடுப்பிட்டி புறாப்பொறுக்கிப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த கனரக வாகனமொன்று நேற்றுக் காலை தடம்புரண்டுள்ளது.

கற்கோவளம் பகுதியிலிருந்து வீதி புனரமைப்புப் பணிக்குப் பயன்படுத்தப்பட்ட ரோலர் வாகனத்தைத் ஏற்றிக்கொண்டு சென்றகனரகவாகனமே புறாப்பொறுக்கிப் பகுதியில்தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Immediate Vacancy

OFNIR Engineering

Kameleswary Building K.K.S Road Kondavil West, Jaffna

**யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக இயங்கி வரும் எமது கட்டட நிறுவனத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஊழியர்கள் தேவை.**

(1) **Technical Officer** (04 வெற்றிடங்கள்)

Qualification

- HND Civil Engineering (with 2 years exprience)
- NVQ 4,5 Construction Technology (with 3 years exprience)

(2) **2D Draftsman** (01 வெற்றிடங்கள்)

Qualification

- Diploma or Digree in Architecture
- Proficiency in Auto CAD, Revit or Similamr CAD software
- Knowledge of Approval Drawing

தகுதியானவர்கள்,ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு (20.07.2025) ஞாயிற்றுக்கிழமைக்கு முன் தங்களது CVயினை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சம்பளம் நேர்முகத் தேர்வின் போது பேசி தீர்மானிக்கப்படும்.

Whatsapp - 077 502 4745

மேலும் தொடர்புகளுக்கு 077 502 4745 இந்த இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

## பணிப்பெண் தேவை

மிகவும் அன்பான சிறிய குடும்பம் ஒன்றை பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை. (உறவினர் போன்று பழகுபவர்)

**077 345 0039**
**077 348 0039**

## வேலை வாய்ப்பு

**ISO தரச்சான்றிதல் பெற்ற கட்டடநிர்மாண நிறுவனத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக்கோவையை 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

Trchnical Officer (Civil) & Electrical

(NCT-Civil / QS / Elect, HND - Civil / QS / Elect

Tow years Experience in Building and Waster supply.

**அலுவலக உதவியாளர்**

கல்வி அறிவு - A/L உடன் கணினி அறிவு மற்றும் ஆங்கில அறிவு.

வயதெல்லை - 30 வயதிற்கு உட்பட்டவர்கள்.

Email - vacancynsc@gmail.com

Whatsapp - 077 712 0945

# தவறான முடிவெடுத்து மாணவி உயிர்மாய்ப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 6

நுணாவில் மேற்கில் பாட சாலை மாணவியொருவர் நேற்று தவறான முடிவெடுத்துத் உயிரிழந்துள்ளார். மாணவியின் உடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-28)

## நாகபூஷணி திருமண சேவை

**உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.**

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்)

**077 138 7596, 071 999 9306**

## தேவை

கூலி ஆட்கள், சாரதி, மில் வேலை தெரிந்தவர்கள், மில் உபகரணங்கள் தேவை

தொடர்பு: **077 772 2215**

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு முகாமையாளர், அலுவலக உத்தியோகத்தர் O/L க்கு மேல் ஆண்/பெண் அதி கூடிய சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: **076 112 4145**

## வீட்டுப் பணியாளர் தேவை

**யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வீட்டுச் சமையலுக்கு உதவிசெய்தல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரை பராமரிக்க பணியாளர் உடன் தேவை.**

**078 781 1049**

## காணி விற்பனைக்கு

கட்டுடை மானிப்பாய் கோவிற்பற்று எழுமுள்ளி ஒழுங்கையில் 6 பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: **077 787 7843**

## வேலைக்கு ஆள் தேவை

(Data Entry)


- திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதியை அண்மித்து வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- கல்வித்தகமை O/L-தமிழ், கணிதம், ஆங்கிலம்
- (ஓரளவு) கணனி அறிவு (ஓரளவு) கட்டாயம் தேவை.

வயதெல்லை 23 க்கு உட்பட்ட ஆண்கள் மட்டும்.

தொடர்புகளுக்கு: **077 663 6384**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 10 | | 05 |
| 01 | | 07 |
| 1926 | | 2025 |



# திருமதி. சிரோன்மணி நாகராசா

யாழ்பாணம் நாவலியூரினை பிறப்பிடமாகவும், அளவெட்டி மற்றும் கொழும்பு (A7, 1/1, மனிங்ரவுன் தொடர்மாடி, நாரகேன்பிட்டிய) வை வதிவிடமாகவும் கொண்ட சிரோன்மணி நாகராசா அவர்கள் **05.07.2025 தனது 100 வது வயதில் காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாபிள்ளை, அன்னபிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவரான சுந்தரம் நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம் (RIO CINEMA, NAVA CINEMA உரிமையாளர்), செல்லத்துரை, சரஸ்வதி, செல்வமணி, கதிர்காமர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. செல்வராஜா (Building Dept), திரு.சுந்தர்ராஜா (முன்னாள் பொறியியலாளர் - KKS சீமேந்து தொழிற்சாலை, Local Govt. அவுஸ்திரேலியா), திரு. ரட்ணராஜா (நிதி ஆலோசகர் -கனடா), திருமதி. செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ஶ்ரீரஞ்சனி, திருமதி.அருட்சோதி (அவுஸ்திரேலியா), நலாயினி (கனடா), கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிருஜா, தனுஜா, கபில்ராஜ், கோபிராஜ், சர்மிளா, நிருபராஜ், திலிப், பிரதாபன், நிரோஜ், துசயந்தி, தினேஷ் ஆகியோரின் அன்புப்பேத்தியும், ஆர்த்தி, ஜெய் மஹேஷ், கவின், கனுஷா, உருத்திரா, அபிஷா, ராதா, கேடன், கலன், ஆர்யா, ஜானவி, ஓவியா, கிருஷ்னி, கிஷோர் ஆகியோரின் அன்பு கொள்ளுபேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **07.07.2025** திங்கட்கிழமை காலை **8.00** மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மு.ப.**11.00** மணிக்கு ஈமக்கிரியைகள் ஆரம்பமாகி பி.ப.**1.00** மணிக்கு பொரளை இந்து மயானத்தில் தகனக்கிரிகைகள் இடம் பெறும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**தகவல் : குடும்பத்தினர்**

**A 7,1/1, Manning Town, Flats, Mangala Road, Narahenpita**

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29.05.1959 | | 02.07.2025 |



## தாமோதரம்பிள்ளை சஞ்சீவ்ராஜ்
## (ஜீவா)

**அம்பாளின் அடியவனாய்**
**அரும்பணிகள் ஆற்றுனீரே**
**அவள் அடியை தொழுவதற்காய்**
**ஓடோடி வருவீரே - இன்று**
**கொடியேறி அவளருள**
**அவளடியில் சென்றீரோ.**

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திகருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.**

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**நண்பர்கள்,**
**நத்தாவில் அம்மன் கோவிலடி,**
**கொக்குவில் கிழக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வுக்கு பொலிஸாரே பிரதான காரணம்

## ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 6

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகளுக்கு பொலிஸாரே காரணம் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஒட்டுசுட்டான் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான்பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்றும், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார். அந்தச் சந்தர்ப்பத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இங்கு சட்டம் ஒழுங்கு சீரின்றியே காணப்படுகின்றது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸார் மீதே நாம் குற்றச்சாட்டு முன்வைக்கவேண்டியுள்ளது. பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையாலேயே இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வுகள் போன்ற பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறான மணல் அகழ்வு செயற்பாடுகள் மற்றும் கசிப்பு, கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத போதைப்பொருள்களோ எவையும் இருக்கவில்லை. விடுதலைப் புலிகள் முறையாக சட்ட ஒழுங்கைப் பாதுகாத்தனர். அதையாரும் மறுக்கமுடியாது-என்றார். (எ-246)

# வெள்ளைஈயைக் கட்டுப்படுத்த 14 முதல் இருவார வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

**தென்னைச் செய்கையைப் பாதிக்கும் வெள்ளைஈயின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதைக் கட்டுப்படுத்த இருவார வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்று தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் தேவராஜா வைகுந்தன் தெரிவித்தார்**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தென்னைச் செய்கையில் வெள்ளைஈயானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு மாகாணத்தில் அதிலும் யாழ்ப்பாணத்தில் அதன் தாக்கம் அதிகமாக உள்ளது. வெள்ளைஈயைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து இருவாரகால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம். சாவகச்சேரி, உடுவில், கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள அனைத்துத்தென்னை மரங்களுக்கும் வெள்ளைஈயைக் கட்டுப்படுத்தும் திரவக் கரைசலை விசிறவுள்ளோம். அதற்காக 200 விசிறும் இயந்திரங்களைப் பயன்படுத்த உள்ளோம். ஒரு இயந்திரத்தால் ஒரு நாளைக்கு 90 மரங்களுக்கு கரைசலை விசிறமுடியும்.

இந்தப் பணியை தனியாக அரசாங்கமோ அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களோ செய்யமுடியாது. மக்களும் எங்களுடன் கைகோர்த்தால் மாத்திரமே இந்தப் பணிகளை முன்னெடுக்கமுடியும்.

இந்தப் பணியில் பங்கெடுக்க விரும்புவோர் சுயாதீனமாக வந்து பிரதேசங்களைத் தாண்டியும் உங்களது பங்களிப்பை வழங்கலாம்-என்றார். (எ-27)



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வுகள்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர் திருமதி சுதர்சன் அமுதகலா "ஆயத்தமில்லை" எனும் தலைப்பில் ஆன்மீக உரை ஆற்றினார். (ச-41-66)





புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பாடசாலைமட்டக் கண்காட்சி நிகழ்வு உப அதிபர் அ.மதனராஜ் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. (ச-41)

# ஆசிய ஹொக்கிக் கிண்ணப்போட்டி சென்.ஜோன்ஸ் மாணவன் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

சீனாவில் ஆரம்பமாகியுள்ள கனிஷ்ட ஹொக்கிக் கிண்ணத்தொடரில் 18வயதின் கீழ் அணியில் பங்குகொள்வதற்காக இலங்கையில் இருந்து 7 தமிழ்பேசும் இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் கொழும்பிலிருந்து நான்கு தமிழ் பேசும் இளைஞர்களும் கண்டியில் இருந்து இரண்டு தமிழ் பேசும் இளைஞர்களும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இருந்து மாஸ். எஸ். ஜோன் நதேனியா எனும் இளைஞரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச-113)





# மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 6

சைவசமய குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை தின நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலனசபையின் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலனசபையின் ஏற்பாட்டில் சைவபரிபாலன சபையைச் சேர்ந்த செல்வி.நா.நீலாம்பிகை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் க.கலியுகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். நிகழ்வில் யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், யாழ்.இளையதம்பி இந்து மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-66)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 நாள்கள் இடம்பெறவுள்ளது.

மஹோற்சவத்தை முன்னிட்டு 17ஆம் திகதி வியாழக்கிழமை சாந்திபூஜை வழிபாடுகளும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெறும் .

அந்தவகையில், மஹோற்சவத்தின் 8ஆம் நாளாகிய எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 26ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6 மணிக்குக் கொடியிறக்கம் இடம்பெறவுள்ளது. (ச-41-100)

# தடுப்புக்காவல் விதிமுறைகள் பொலிஸாருக்கு செயலமர்வு

வவுனியா, ஜூலை 6

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாப் பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில், சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு வன்னிப் பிராந்தியப் பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கான செயலமர்வு வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாப் பிராந்திய இணைப்பாளர் (பதில்) தலைமையில் இடம்பெற்ற செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மருத்துவர் ஜிகான் குணதிலக, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்று தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். பிற்பகலுக்குமேல் தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.


**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் ஸ்க்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால்சிற்சிலசங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காகசெலவுசெய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.




# ஆரோக்கியமான பாடசாலை யாழ்.இந்துவுக்கு விருது

யாழ்ப்பாணம், ஜூலை 6

ஆசிய - பசிபிக் பிராந்தியத்துக்கான ஆரோக்கியமான பாடசாலைக்கான விருதினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது. இவ்விருது வழங்கும் விழா கடந்த வியாழக்கிழமை வியட்நாமின் டனாங்கில் உள்ள புல்மேன் பீச் ரிசார்ட்டில் நடைபெற்றது. 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்கேற்ற, சுறுசுறுப்பான வாழ்க்கைமுறைப் பிரிவில் யாழ்.இந்துக்கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதன்மூலம் பாடசாலைக்கு 3.5 மில்லியன் ரூபாய் பரிசுத் தொகை கிடைக்கப்பெற்றுள்ளது. இதே வேளை யாழ்.இந்துக்கல்லூரி, இலங்கையின் ஆரோக்கியமான பாடசாலையாக தெரிவுசெய்யப்பட்டு ஆசிய பசுபிக் பிராந்தியப் போட்டியில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-41)

# மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 6

பூபாலசிங்கம் புத்தக சாலையின் ஆதரவில், பிரான்ஸ் நாட்டில் வாழும் மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே. காசலிங்கத்தின் அமுத விழா சிறப்பு மலர் வெளியீடு சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம் தலைமையில் நாளை திங்கட்கிழமை மாலை 7மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் கலந்துகொள்ளவுள்ளார். பத்திரிகையாளர்கள், கலை இலக்கியவாதிகள் கருத்துரை வழங்குவர். (ச-41)



# அக்கராயன் மன்னனின் நினைவுதின நிகழ்வு


யாழ்ப்பாணம், ஜூலை 6

தமிழ் மன்னர்களில் ஒருவரான அக்கராயன் மன்னனின் நினைவு தின நிகழ்வு அக்கராயன் சந்தியில் நிறுவப்பட்டுள்ள சிலையடியில் நேற்று நடைபெற்றது. கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடமாகாண முன்னாள் கல்வியமைச்சர் த.குருகுலராஜா, பிரதேசசபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்பு சார்ந்தோர் எனப் பலர் கலந்துகொண்டனர். 2018ஆம் ஆண்டு கிளிநொச்சியில் அக்கராயன் மன்னனுக்குச் சிலை நிறுவப்பட்டது. ஒவ்வொரு வருடமும் சிலை வைக்கப்பட்ட தினத்தில் நினைவுநாள் கொண்டாடப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-113)

# நல்லூர்ப் பெருந்திருவிழா ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டுச் சிவகுரு ஆதீன விசேட பணித்திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணியளவில் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இம்முறை முதற்தடவையாக 25 நாள்களும் பஜனை, அருளுரை, அன்னதானம் என்பன நடைபெறவுள்ளன. இப்பணிகளில் இணைய விரும்பும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கேட்டுள்ளார். (ச-41-66)



நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆனிப் பொங்கல் கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-17)

# நினைவுப்பேருரையும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூலை 6

மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் ஏற்பாட்டில் சண்முகதாசன் நினைவுப்பேருரையும் 'கொந்தளிப்பான சர்வதேச நிலைவரமும் இலங்கைக்கான மார்க்கமும்' எனும் நூல் வெளியீடும் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. நூல் அறிமுகவுரையை வி.ரி.இளங்கோவனும் நினைவுப்பேருரையை கலாநிதி அகிலன் கதிர்காமரும் ஆற்றுவர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

எண்ணங்களின் குழந்தைகள்தான் ஏழ்மையும் செல்வமும்.

– நெப்போலியன் ஹில்–

# ஊழல்களின் திரட்சி!

இலங்கையில் ஏழைக்குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்திருக்கின்றார் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சர் உபாலி பன்னிலகே. 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 இலட்சமாகக் காணப்பட்ட ஏழைக்குடும்பங்களின் எண்ணிக்கை, 2010ஆம் ஆண்டில் 15 இலட்சமாகவும், 2024ஆம் ஆண்டில் 18 இலட்சமாகவும் உயர்வடைந்துள்ளது என்றும் அவர் கூறியிருக்கின்றார். இந்த நாட்டில் எவ்வளவு தூரம் ஊழல்களும் மோசடிகளும் தலைவிரித்தாடியிருக்கின்றன என்பதையும், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வறுமையொழிப்புத்திட்டங்கள் எவையும் மக்களை உரியவகையில் சென்றடையவில்லை என்பதையும்தான் அமைச்சர் உபாலி பன்னிலகேவின் கருத்துக் கட்டியம் செய்திருக்கின்றது.

2000ஆம் ஆண்டில் 11 இலட்சமாகக் காணப்பட்ட வறிய குடும்பங்களின் எண்ணிக்கை 2010ஆம் ஆண்டில் 15இலட்சமாக அதிகரித்தமைக்குநியாயமான காரணங்கள் இருக்கச்செய்கின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் போர் கோரம் காட்டியதாலும், மக்கள் வாழ்விழந்தும், வேலையிழந்தும் வறுமையுடன் தள்ளாடிக்கொண்டிருந்ததாலும் அந்த அதிகரிப்பு ஏற்றுக்கொள்ளக் கூடியதே. ஆனால், 2010ஆம் ஆண்டில் 15 இலட்சமாகக் காணப்பட்ட வறிய குடும்பங்களின் எண்ணிக்கை 2024ஆம் ஆண்டில் 18 இலட்சமாக அதிகரித்தமைக்கு யார் பொறுப்பு? போர் முடிவுக்கு வந்தபின்னர், 'வடக்கின் வசந்தம்''மஹிந்த சிந்தனை' 'சமுர்த்தி', போன்ற பொருளாதார மீளெழுச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட பின்னரும் ஏழைக்குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றதென்றால், அந்தத் திட்டங்கள் எவையும் மக்களுக்கானவையாக இருக்கவில்லை என்றே அர்த்தம்.

நாட்டில் தற்போது 18 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசுமக் கொடுப்பனவைப் பெறுகின்றன. மேலும் 9 இலட்சம் குடும்பங்கள் காத்திருப்புப் பட்டியலில் உள்ளன. ஆக, அரசாங்கத்தின் பொருளாதார உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 27 இலட்சமாகக் காணப்படுகின்றது. இது நாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் ஏறத்தாழ பத்து வீதம். வறிய நாடுகளுக்குத்தான் இத்தகைய புள்ளிவிவரங்கள் பொருந்தும். இலங்கை ஒரு வளர்ந்துவரும் நாடு என்ற ரீதியில், இந்தப் புள்ளிவிவரங்கள் ஏற்கவும், சகித்துக்கொள்ளவும் தகாதவை.

எல்லாவற்றையும்விட அஸ்வெசும போன்ற நலத்திட்டக் கொடுப்பனவுகள், மக்களை அந்த நிதியில் முற்றாகத் தங்கியிருப்பதற்காகக் கொடுக்கப்படுவதில்லை. வாழ்க்கைத்தரத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்வதற்காக அரசாங்கம் வழங்கும் சிறு உதவியே (மூலதனமே) அது. அந்தத் தொகையை வைத்து, சிறு சிறு தொழில்களை மேற்கொண்டு மக்கள் தமது பொருண்மியத்தைத் தாமே உறுதிப்படுத்தும்வகையில் அமையவேண்டும் என்பதுதான் நலத்திட்டக் கொடுப்பனவுகளின் அடிநாதம். இவ்வாறிருக்கையில், அரசின் கொடுப்பனவை நம்பியிருக்கும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கின்றதென்றால், இதுநாள் வரையில் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் உரியவகையில் பயன்படுத்தப்படவில்லை அதன் பயன்பாடுகளை துறைசார் அதிகாரிகள் உரியவகையில் கண்காணிக்கவில்லை என்றே அர்த்தம். ஆதலால், நாட்டில் இடம்பெற்ற -இடம்பெறுகின்ற பல்வேறு ஊழல்களின் திரட்சியாகவே உபாலி பன்னிலகேவின் கருத்தைப் பார்க்கவேண்டியுள்ளது. எனவே, விசாரணைகள் இன்னும் ஆழப்படுத்தப்படவேண்டும்.




# மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் அரசு துரிதம்



அமைச்சர் சந்திர அபேரத்ன தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 6**

**மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் துரிதமாக செயற்படுகின்றது. மாகாணசபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயம் குறித்து விரைவில் அமைச்சரவை ஆலோசனைக்குழுவில் விவாதிக்கப்படும் என்று பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்திர அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாணசபைகளைத் தொடர்ந்து நடத்துவதற்குத் நாம் உடன்படவில்லை. அதன்படி மாகாணசபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படமாட்டாது. மாகாணசபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்து, மாகாணசபைகளை நிறுவ ஆளும் கட்சி உடன்பட்டுள்ளது- என்றார். இதேவேளை 2017 - 2019 கால கட்டத்தில் அனைத்து மாகாணசபைகளும் கலைக்கப்பட்ட பின்னர் இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை. தற்போது அனைத்து மாகாணசபைகளும் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநரின் தலைமையின்கீழ் இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சந்திரசேனவுக்கு விளக்கமறியல்

முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேனவை எதிர் வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எஸ்.எம் சந்திரசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது தனது நண்பர்களுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் காலை முன்னிலையாகியிருந்தபோது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பி டத்தக்கது. (ச-இ)

# கஞ்சாவுடன் மூவர் கைது

கொழும்பு, ஜூலை 6

வென்னப்புவயில் கேரள கஞ்சா மற்றும் இரண்டு கைத்துப்பாக்கிளுடன் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 913 கிலோகிராம் 124 கிராம் கேரள கஞ்சா, 2 வெளிநாட்டுத் தயாரிப்புக் கைத்துப்பாக்கிகள், 44 தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நொச்சியாகம, உலுக்குளம் மற்றும் அநுராதபுரம் பகுதிகளில் வசிப்பவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





# புதிய தொழிலாளர் சட்டம் தயாரிக்க குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 6

புதிய தொழிலாளர் சட்டத்துக்கான திட்டங்களைத் தயாரிக்க துறைசார் நிபுணர்களைக்கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார். உத்தேச புதிய தொழிலாளர் சட்டம் அனைத்துத் தரப்பினரின் அனுமதியுடன் மட்டுமே கொண்டுவரப்படும். முந்தைய அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட சட்டத்தை மீண்டும் கொண்டுவர எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது. அதன்படி, ஊழியர் சேமலாப நிதியத்தின் நிர்வாகம் மற்றும் நிர்வாகத்தை ஒரு பொதுவான தளத்திற்குக் கொண்டுவருவது. நிதியை மேலும் வலுப்படுத்துவது மற்றும் உறுப்பினர்களுக்கு சலுகைகளை வழங்குவதை மிகவும் திறம்படச் செய்வது குறித்து இங்கு யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
திங்கட்கிழமை - ஆனி 23
07.07.2025
சுபநேரம் : 11.58- 01.28
ராகுகாலம் :07.28- 08.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் வளங்கள் அபகரிப்பு உடன் நிறுத்தப்படவேண்டும்!

## அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

மன்னார், ஜூலை 6

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் காணி அபகரிப்பு, மணல் அகழ்வு, காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் ஆகியவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் நகர பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மன்னார் பிரதேச செயலக ரீதியாக கலந்துரையாடப் படவேண்டிய விடயங்கள் மற்றும் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

மன்னார் வளங்கள் அபகரிக்கப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது என்றும் இதற்கு மாவட்டத்தில் உள்ள உரிய திணைக்கள அதிகாரிகள் துணை போவதாகவும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

அதற்குப் பதிலளித்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான உபாலி சமரசிங்க, மக்களைப் பாதிக்கும் திட்டங்கள் குறித்து துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்- என்றார். (ச-56)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 02 . 03 . 1988

உதிர்வு 24 . 06 . 2025

### சத்தியநாதன் மோசஸ் நிவேதன்

எமது பாடசாலை முன்னாள் நிர்வாக ஊழியர் சத்தியநாதன் மோசஸ் நிவேதன் அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" பிலிப்பியர் 1:21

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை
மானிப்பாய்

(CR 45439) E



# தெற்காசிய உதைபந்தாட்டப் போட்டி மகாஜன வீராங்கனைகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் 20 வயதுப் பெண்கள் தேசிய அணியில் மகாஜனக் கல்லூரி வீராங்கனைகள் மூவர் இடம் பிடித்துள்ளனர். ஜெ.டயன்சிகா, ரி.சஸ்மி, எஸ்.கம்சியா ஆகிய வீராங்கனைகளே இடம் பெற்றுள்ளனர். இந்தப் போட்டி பங்களாதேஷில் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 21 வரை நடைபெறவுள்ளது. (ச-66,27,26)

## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



தோற்றம் 16 . 11 . 1939

மறைவு 06 . 06 . 2025

கடந்த 06.06.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகராசா செல்வராசா

(முன்னாள் விற்பனை முகாமையாளர் - மானிப்பாய் பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சமாதான நீதவான்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 04.07.2025 வெள்ளிக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய்

குடும்பத்தினர்

(CS 58778) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 03 . 1988

மறைவு 24 . 06 . 2025

### மோசஸ் நிவேதன் சத்தியநாதன்

அச்செழு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் நிவேதன் சத்தியநாதன் அவர்கள் கடந்த (24.06.2025) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.


அன்னார் ஜீடித் செறின் அவர்களின் அன்புக் கணவரும், சத்தியநாதன் - சறோயினி தம்பதியரின் தவப்புதல்வனும், Paster ரஞ்சன் - சாந்தினி தம்பதியரின் பாசமிகு மருமகனும், நிவேதிகாவின் அன்புச் சகோதரனும், ருக்ஷனின் மைத்துனரும், லியா, லிதியாவின் பாசமிகு தாய்மாமனாரும், காலஞ்சென்ற ரகுநாதன் மற்றும் பரமானந்தம், சந்தியா கோ பத்மநாதன், பிறேம், வரதன், அம்புலிதேவி, கௌரி, வசந்தினி, சாந்தினி, சுபேந்தினி, செறின் சுகந்தினி ஆகியோரின் பெறாமகனும், இராசலட்சுமி காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, பாக்கியலட்சுமி மற்றும் றோகினி காலஞ்சென்ற செல்வநாயகம், ஒப்பிலாமணி காலஞ்சென்ற யோகராஜா நைற் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் அச்செழுவில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (07.07.2025) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று பூதவுடல் குடும்ப சேமக்காலையான விலங்கன் கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 222 1242
077 710 0584

(CS/58777) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## 6 மாதங்களில்
# மதுவரித் திணைக்களத்துக்கு ரூ. 120.5 பில்லியன் வருவாய்





கொழும்பு, ஜூலை 6

மதுவரித் திணைக்களம் 6 மாதங்களில் 120.5 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டில் 170.3 பில்லியன் ரூபாவும், 2023ஆம் ஆண்டில் 178.6 பில்லியன் ரூபாவும், 2024ஆம் ஆண்டில் 226.7 பில்லியன் ரூபாவும் மதுவரித் திணைக்களத்தால் வருமானம் ஈட்டப்பட்டது.

2025 ஜூன் 30 வரை 120.5 பில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது. அது நிதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள இலக்கில் 102.6 வீத வளர்ச்சியாகும் என்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (சஇ)

# பஸ் கட்டணம் குறைப்பு மீறினால் சட்டம் பாயும்




கொழும்பு, ஜூலை 6

புதிய பஸ் கட்டணத் திருத்தம் மீறப்படும் சந்தர்ப்பத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 1955 என்ற துரித எண்ணைத் தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வருடாந்த பஸ் கட்டணத் திருத்தம் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. வருடாந்தத் திருத்தத்தின்படி பஸ் கட்டணங்கள் 0.55 வீதம் குறைக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜெயவர்தன தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தர்மலிங்கம் சிவபாலன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை ஆசிரியரும், அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் அறநெறிப் பாடசாலையின் அதிபருமாகிய தர்மலிங்கம் சிவபாலன் அவர்கள் கடந்த (04.07.2025) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - ராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கண்ணம்மாவின் பாசமிகு கணவரும், சபேசன், யதீசன் (Swans Dark Lights) , தினோசன் (யா/ சென் பெனடிக் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவானந்தி, உசாநந்தினி ஆகியோரின் சகோதரனும், சுஜித்தா, ஜினித்தா, கிரிஷாந்தினி (ஆசிரியர்-கிளி/ அணிச்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பாலச்சந்திரன், ராஜேஸ்வரன் காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் ராஜ்குமார், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், ஜெகதா, முகுந்தா, சுதாகரன், கமலகாஸ் ஆகியோரின் சிறிய தந்தையும், கிருஷ்ணவி, கிருத்திக், சஞ்ஜெய், மோனிஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை 322, ஆனந்தன் வடலி வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தோற்றம் 20.04.1958 | மறைவு 04.07.2025

**322, ஆனந்தன் வடலி வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 583 3275**

(CS/58785) J-1

# மரண அறிவித்தல்



## இராசேந்திரம் நாகம்மா

ஆவரங்கால் வங்கி வீதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இராசேந்திரம் நாகம்மா (02.07.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான மூத்ததம்பி - குஞ்சம்மா தம்பதியரின் பாசமிகு புத்திரியும், வல்லிபுரம் இராசேந்திரம் அவர்களின் அன்புத் துணைவியும், தம்பு, செல்வரட்ணம், சிவரட்ணம், சபாரட்ணம், நவரட்ணம், விசுவரட்ணம், கனகரட்ணம், யோகம்மா, இராஜபூபதி ஆகியோரின் சகோதரியும், சுதாநிதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கலாநிதி (கனடா), காலஞ்சென்ற பத்மாநிதி மற்றும் ஜெயநிதி (கனடா), குலநிதி (கனடா), உதயேந்திரன் (கனடா), தவேந்திரன் (கனடா), விஜியேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்
காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் இரவீந்திரராசா, கிருஷ்ணதாஸ், கதிர்காமசேகரன் டுஷாத்தா, கிறிஸ்ரபெல், தீபா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிஷாந்தன் - ஆர்த்தி, அனுஷாந்தன - அனித்தா, யசோதா - ஸ்ரீகுமார், கிருத்திகா - பாலமுரளி, யசிந்தன் - ராகவி, றொசான் - றொசானி, மகிதா, கிருஸ்ரிகா, கிஷானி, நிஸ்மியா, விதுன், அர்ச்சனா, அஜேய், ஜெனிலியா, அயானா, மெலோனா, லிசானா ஆகியோரின் பேர்த்தியாரும், அர்த்தஷா, அக்னிஷன், அரியானா, அர்நிஷா, ஆதீஸ், துயானா, அபர்னா, தக்ஷன் ஆகியோரின் பூட்டியம் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 16.08.1930 | மறைவு 02.07.2025

**16, கைலாசப்பிள்ளையார்,**
**கோவில் வீதி,**
**நல்லூர்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 3560**

(CS 58784) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர பிரதி முதல்வர் யாழ்.நகருக்குக் களவிஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி. மதிவதனி விவேகானந்தராசாவின் பணிப்பின் பேரில் மாநகரசபையின் பிரதி முதல்வர் இம்மானுவல் தயாளன் தலைமையில் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் உள்ளடங்கலான குழுவினர் கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணம் நகர்ப்புறக் கடைத்தொகுதிக்குக் களவிஜயமொன்றை மேற்கொண்டனர்.

அங்கு வியாபாரிகள் எதிர்கொள்ளும் சவால்கள், காதார வசதிகள் குறிப்பாக குடிதண்ணீர் மற்றும் பொதுமலசல கூடம் சார்ந்து காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்தனர். (ச-41-66)

## www.EQMarriageService.com

CALL 076 664 9401

ஒன்லைன் திருமணசேவை
Ensured Quality Lanka (Pvt) Ltd
Bambalapity, Colombo 04

| மணமகன் தேவை | மணமகள் தேவை |
|---|---|
| 1994, இந்து, அனுசம்<br>பட்டதாரி<br>**AUDITOR, LONDON**<br>சொந்த இடம்: காரைநகர்<br>மணமகள் பதிவு இல:11714 | 2002, இந்து, ஆயிலியம்<br>பட்டதாரி<br>**AUDITOR, U.K**<br>சொந்த இடம்: மயிலிட்டி<br>மணமகன் பதிவு இல:11789 |
| 1995, இந்து, ஹஸ்தம்<br>பட்டதாரி<br>**TEACHER, CANADA**<br>சொந்த இடம்: கொக்குவில்<br>மணமகள் பதிவு இல:11744 | 1992, இந்து, திருவோணம்<br>பட்டதாரி<br>**ENGINEER, CANADA**<br>சொந்த இடம்: அனலைதீவு<br>மணமகன் பதிவு இல:11757 |
| 1995, இந்து, பூரம்<br>பட்டதாரி<br>**NURSE**<br>சொந்த இடம்: பருத்தித்துறை<br>மணமகள் பதிவு இல:11798 | 1994, இந்து, பரணி<br>பட்டதாரி<br>**ACCOUNTANT**<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல:11837 |
| 1999, இந்து, திருவாதிரை<br>முதுமானி பட்டதாரி<br>**OPTOMETRIST, AUSTRALIA**<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல:11476 | 1993, இந்து, புனர்பூசம்<br>பட்டதாரி<br>**ENGINEER, AUSTRALIA**<br>சொந்த இடம்: அல்வாய்<br>மணமகன் பதிவு இல:11807 |
| 1997, இந்து, கேட்டை<br>பட்டதாரி<br>**ENGINEER**<br>சொந்த இடம்: கோப்பாய்<br>மணமகள் பதிவு இல:11763 | 1996, இந்து, பூராடம்<br>முதுமானி பட்டதாரி<br>**SOFTWARE ENGINEER**<br>சொந்த இடம்: கிளிநொச்சி<br>மணமகன் பதிவு இல:11820 |

**CALL 076 664 9401**

## வேலை வாய்ப்பு

**யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு கீழ்காணும் ஆட்கள் தேவை**

- Manager (2 Years Experience)
- Administration
- Computer Billing + Cashier
- Sales Assistant
- Driver - AD Licence
- Packing - பொதியிடல்

**Part Time - 05.00 p.m to 10.pm**

**வயது எல்லை 18 - 35**

**யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது**

தொடர்புகளுக்கு: **077 419 5209, 077 419 5218**

CS 3546 (B) E

## பகிரங்க ஏல விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கான வதிவிடத்தின் (பழைய பூங்கா)சுற்றாடலில் காணப்படும் விழுந்த நிலையிலுள்ள இரண்டு மலை வேம்பு மரங்கள், ஒரு மருத மரம் (பட்ட நிலையில்) மற்றும், அங்கு காணப்படும் கற்கள் என்பன 2025.07.15ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏல விற்பனையில் மேற்படி பொருட்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வார காலத்தினுள் அவற்றை பழைய பூங்கா வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். மேற்படி மரங்கள் மற்றும் கற்கள் என்பவற்றை பார்வையிட விரும்புபவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தருடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**ம.பிரதீபன்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## நூல் வெளியீடு

எங்கட புத்தகங்கள் நிறுவனத்தின் வெளியீடான நாடகர் க. பாலேந்திராவின் 'பிரத்தியேகக் காட்சி' ஏழு நாடகங்களும் பதிவுகளும் எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் நாடகத் துறை சார்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)




## நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனம் துறவு வாழ்க்கைக்கு முன்வர விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

ஈழத்தின் சைவ சமயத்திற்கான உயர் பீடமாய் விளங்கிய நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமுதல்வர் அண்மையில் பரிபூரணம் அடைந்தமை அனைவரும் அறிந்ததே.

தற்போது ஆதீனத்திற்கான பணிகளை இயற்ற குருமுதல்வரோ, தம்பிரான் சுவாமிகளோ இல்லாதிருப்பதால், ஆதீனத்தின் சமயப் பணிகள் தடைப்பட்டு நிற்கின்றன.

ஆதீனப் பணிகளை முன்னின்று நடத்துவதற்காக, தூய துறவு வாழ்க்கை மேற்கொள்ள விரும்பி நிற்கும் நால்வர் எம்மால் தேர்தெடுக்கப்படவுள்ளனர்.

தனி வாழ்வொழுக்கம், இறைநம்பிக்கை, சைவத்தின் மீதான பற்றுதல், சைவ அறிவு, முற்றும் துறந்து இயங்கும் மனப்பான்மை கொண்ட எவரும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்போரில் நால்வர், அறிஞர் குழுவால் தேர்வு செய்யப்படுவர்.

துறவுவாழ்க்கைக்காய் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு இந்திய ஆதீனங்களில் பயிற்சி அளிக்கப்படும். அதில் தகுதி அடிப்படையில் ஒருவர் குருமுதல்வராகவும், மற்றைய மூவரும், தம்பிரான் சுவாமிகளாகவும் பணியாற்ற நியமிக்கப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் துறவியருக்கான, தங்குமிட வசதி, உணவு, உடை முதலிய அனைத்துத் தேவைகளும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

**செயலாளர்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**
**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை**
**இல. 211/17, கோவில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல 021 222 1075**

(CS 58774) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்




**ஆசிரியர் சேவையில் 26.01.1998 முதல் 27 வருடங்கள்
அளப்பரிய சேவையாற்றி இன்று (06.07.2025)
ஞாயிற்றுக்கிழமை தனது அறுபதாவது வயதில்
மணிவிழா காணும் எமது ஆசிரியர்**

## திரு. கனகசபாபதி சந்திரமௌலீசன்

**(இலங்கை ஆசிரியர் சேவை தரம் I)**

**அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.**

பலகையில் பிறக்கும் எண்ணின் கலை.
பதில்களில் தெரியும் தீட்சை மனம்.
கணிதம் ஒரு கவிதை எனப் புகழ்பவன்.
அமைதியில் விளையும் விந்தை மிகு நாயகன்-
நலமோடு வாழ்க...!

**சேவை விபரம்:**

- யா/ கச்சாய் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை 26.01.1998 - 13.01.2011
- கி/ கோணாவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை 14.01.2011 - 16.01.2013
- யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் 17.01.2013 - 24.04.2018
- யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் 25.04.2018 - 05.07.2025

**வாழ்த்துவோர்:**

**பாடசாலைச் சமூகம்**

**யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்**

(CR/45397) J-1

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 3/4 Km தூரத்தில் பரப்பு 25 இலட்சம். 5+3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 446 0241**

## கார் விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட Toyota Yarish Car விற்பனைக்குண்டு. 21.000Km. கலர் Bronze. விலை 12.5 Million (பேசித் தீர்மானிக்கலாம் அதிகூடிய கேள்வி கருத்தில் கொள்ளப்படும்) வாங்கத் தீர்மானித்துள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: **077 805 2520**

# Vacancy

Join Our Team – Accountants, Assistant Accountants & Bookkeepers (Jaffna Office)

We, Ace Accountants & Tax Consultants, are a UK-based, reputed firm of accountants, highly regarded for our expertise and commitment to excellence. We are looking for intelligent, detail-oriented professionals to join our Jaffna office.

**What We Offer:**

- **Attractive Salary**
- **Full Training for Bookkeepers – No experience? We'll train you!**
- **Career Growth & Development**

**Requirements:**

- Work Hours: 12:30 PM – 9:30 PM (Monday – Friday)
- Accountancy Qualification required for Accountants & Assistant Accountants
- School leavers & fresh graduates will be considered for Bookkeeper roles
- Strong English Skills (Written & Spoken)
- Good Computer Skills & Quick Learning Ability

**How to Apply:**

Email your CV to us, and we will contact shortlisted candidates. No direct calls to our office.

**E: careers@aceaccountants.co.uk**


அம்மன் துணை

# வரலாற்று சிறப்புமிக்க வாலையம்மன் மஹா கும்பாபிஷேகம்

## செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



பழைமையும் அற்புதமும் நிறைந்த திருநெல்வேலி கிழக்கு வாளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் குறித்து அடியவர்களுக்கு ஆசி செய்தி வழங்குவதில் ஆனந்தம் அடைகின்றேன் அம்பிகையை தொழுதால் அதிக வரம் பெறலாம் என்ற பாரதியாரின் கூற்று அர்த்தம் உள்ளது மிகத் தொன்மை வாய்ந்த வாழையம்பதி கோவில் ஊரெல்லாம் கூடி பொங்கிப் படைத்து நேர்த்தி செய்த அற்புத கோவில் இவ்வாலய த்தை ஆன்மீகத் தொண்டர் உயர்திரு பரமலிங்கம் அவர்கள் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக புதிய திருக்கோவிலை அவர் சார்ந்த சபை நிறைவேற்றி உள்ளார்கள் கானதற்குரிய காட்சியாக இத்திருக்கோவில் முளிர்கிறது இக்கோவில் புதிதாக நிர்மானிக்கும் போது அமரர் ஜீவரத்தினம் அவர்களுடைய அழைப்பின் பேரில் அடிக்கடி நாட்டும். பாக்கியம் எனக்கும் கிடைத்தது மிகப் பிரமாண்டமான கோவிலாக இன்று இக்கோவிலை காணும்போது ஆனந்தம் அடைகிறேன் ஆலய நிர்வாக சபையைச் சேர்ந்த திரு சீ.முகுந்தன் அவர்கள் மிகக் கற்பனையோடு சிப்பாசாரி அவர்களை பயன்படுத்தி ஓர் புதிய வடிவத்தை இக்கோவிலை உருவாக்கியுள்ளார்கள் திருக்கோவிலை சுற்றி நிறைந்த விருட்சங்கள் நாட்டப் பெற்று அவை பசுஞ்சோலையாக காட்சி அளிக்கின்றனர் புதிய தீர்த்த தடாகம், பிரகாரம் மண்டபங்கள் எல்லாமே அற்புதமாக உள்ளன யைம்மன் ஆலயம் செங்குந்த சமூகத்தவர்களால் பன்னெடுங்காலம் பாதுகாக்கப்பட்டு வந்தது ஆலய அறங்காவலர் குடும்பம் உயர்ந்த நோக்கம் கருதி செய்த நற்காரியத்தால் இன்று மிகப்பெரிய கோவிலை காணும் பாக்கியம் கட்டியுள்ளது எனவே அனைத்து அடியவர்களும் தெய்வத்திருவருள்களை போற்றி எதிர்காலம் சிறப்பிக்க இந்நாளில் பிரார்த்திப்போம் ஆக

**கலாநிதி ஆறு திருமுருகன்**
**தலைவர், துர்கா தேவி தேவஸ்தானம் சிவ பூமி அறக்கட்டளை**

## பிரதம குருவின் ஆசிச் செய்தி



அம்பிகை வேண்டுவார் வேண்டும் வரங்களை அருளும் பொருட்டு வாலையாகவும் குமரியாகவும் சுமங்கலியாகவும் சுவாசினியாகவும் பல்வடிவங்கள் கொண்டு அருள்கிறாள். இந்த வகையில் வாலை அம்மன் வடிவில் திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் பழைமையான காலம் தொட்டு வழிபாடாற்றப்படுகிறாள்.

சின்னஞ் சிறு பெண் போலே சிற்றாடை உடை உடுத்தி செந்தமிழ் இலங்கை திருநெல்வேலியில் எம் வாலையம்மன் சிரிக்கிறாள். அவளது அற்புதங்கள் பற்பல. அவளது ஆலய வரலாறு மிகவும் தொன்மை யானதும் போற்றிதலுக்கும் உரியதோடு பெரும் சிறப்புடையது. இத்தகு கோயில் நீண்ட நெடுங்காலத்திற்கு பின் முழுமையாக புனரமைக்கப் பட்டு. அம்பிகையின் சமஸ்தானமாகவே அமைக்கப்பெற்று மகா கும்பாபிஷேகம் நிகழ்கிறது. குருவருளாலும் வாலை அன்னையின் திருவருளாலும் இந்த வைபவத்தினை பிரதிஷ்டா பிரதம குருவாக தலைமையேற்றுச் செய்யும் பேற்றை அடியேன் பெற்றுள்ளேன். நீண்ட காலத்திற்குப் பின் இந்த் ஆலயம் கும்பாபிஷேகத்தோடு பொலிவு பெறுவது ஊருக்கே எழுச்சி தரும் என்பதில் மாற்றமில்லை. எம் வாலை குமரி ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி எம்மோடு இருந்து எம்மைப் பரிபாலிக்க வேண்டுவோம். அம்பிகையின் பேரருளால் இந்தத் திருப்பணியிலும் மகா கும்பாபிஷேகத்திலும் பங்காற்றி வழிபடும் அனைவருக்கும் வாலை தாயாவள் பாலா திரிபுர சுந்தரியின் பரிபூரண அனுக்கிரகம் சித்திக்கப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

**"ஸாம்யானுஷ்டாசார்ய "**
**சிவ ஸ்ரீ சந்திரசேகர சாந்தரூபசிவாச்சாரியார்**
**ஸ்தானீக முதன்மை குரு (ஸ்ரீ வித்யா உபாஷகர்)**
**[illegible]**



ஈழத்து வடபுலத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரில் புகழ்பூத்த திருநெல்வேலி கிழக்கில் ஸ்ரீசக்கரத்துக்கு என அமைத்த. வாலையம்மன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ வித்யா உபாசகரும் எம் அன்புக் குரியவருமான சிவஸ்ரீ சந்திர சாந்தரூபக்குருக்கள் தலைமையில் நவகுண்ட பக்ஷமாக எதிர்வரும் விசுவாவசு வருட ஆனி 23ம் நாள் (07.07.2025) திங்கள் கிழமை காலை 9 மணிக்கு அனுஷ நட்சத் திரத்தில் நிகழ இருக்கிறது. கும்பாபிஷேக நிகழ்வுகள் கடந்த 27.06.2025 வெள்ளிக்கிழமை காலை 7.55 க்கு கிரியா மங்களாரம்ப த்துடன் ஆரம்பமானது. கடந்த 04.07.2025 மஹாயாகரம்பம் வெள்ளி மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு கடந்த 04.07.2025 வெள்ளிக்கிழமை காலை 7 .00 மணி முதல் 05.07.2025 சனிக்கிழமை மாலை 7.00 மணி வரை நடைபெற்றது. உலகில் ஸ்ரீசக்கரத்துக்கு கோவில்கள் அமைவது அரிது. இலங்கை திருநாட்டில் ஸ்ரீசக்கரத்துக்கு அமைந்த ஒரே ஒரு கோவில் இதுவாகும். இது மன்னன் காலத்துக்குரியதாக இருக்கலாம் என்பது ஐதீகம். அக்காலத்தில் அதர்மம் பெருகி மக்கள் அவதியுறும் போது அம்மன் பல அவதாரங்கள் எடுத்து மக்களின் அவலங்களைப் போக்கி வந்துள்ளார். யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்தில் சூரிய வளவு என அழைக்கப்படும் மிகப் பழமையான கோவில் அமைந் திருந்தது என்பது ஐதீகம். போர்த்துக்கேயர் இந்து கோவில்களை அழித்து தரை மட்ட மாக்கிய பின்னர் சில பல கோவில்கள் மீண்டும் உயிர் பெற்றன. இப்பகுதியில் வாழ்ந்த வைத்தியர் இராமலிங்கத்துக்கு கனவில் அசரீரி தோன்றி உரைத்தபடி. வைத்தியர் இந்தியா சென்று அங்கு சித்தர் ஒருவர் வழங்கிய ஸ்ரீ சக்கரத்தை (மஹாமேரு) கொண்டு வந்து முதலில் சிறிய குடில் ஒன்றுஅமைத்து வழிபட்டு வந்தார். காலம் புரண்டது. மிகப் பிரமாண்டமான தேர். கோலாகலமான திருவிழாக்கள் என கோவில் அடுத்த அடுத்த நூற்றாண்டுகள் பிரமாண்டமாக வளர்ச்சி வென்றது. அக்காலத்தில் திருவிழாக்களில் வாலை அம்மன் நிஜ குதிரையில் தான் பவனி வந்தாள். தனி மரத்தாலான ஊஞ்சல். ஆள் அளவு உயரமான சில்லுகள் உடைய பிரமாண்டமான தேர். கம்பர் சிலை. 1000 தலைகளின் மீதமர்ந்த ஒட்டக்கூத்தர் சிற்ப வேலைகள் எனக் கோவில் சிறந்து விளங்கியது. திருவிழாக் காலம் வசந்த காலமாக ஊரே களைகட்டும். வான வேடிக்கைகளுக்கும் குறைவில்லை. தினசரி முக்கால பூசை. பங்குனி கஞ்சி. ஆனி பூரம். சூரசம்ஹாரம். நவராத்திரி. வசந்த நவராத்திரி போன்ற திருவிழாக்களுடன் கோவில் வருடாந்திர திருவிழாக்கள் 1968 வரை சிறப்பாக நடைபெற்றது. வாலையம்மன் வரலாறு என்பது. பண்டாசுரன் என்ற அசுரனை வதம் செய்ய. வேள்வி குண்டத்திலிருந்து ஸ்ரீசக்ர ரதத்தில் லலிதாம்பிகை என்ற திருநாமத்துடன் தோன்றிய கதை ஆகும். பண்டாசுரன் என்ற அரக்கன் தேவர் களையும். [illegible]

பராச தேவர்கள் மற்றும் முனிவர்கள் தங்களை காக்க வேண்டி அன்னை பராசக்தியை வேண்டினார்கள். லலிதாம்பிகையின் தோற்றம் அசுரனை வதம் செய்வதற்காக. வேள்வி குண்டத்திலிருந்து ஸ்ரீசக்ர ரதத்தில் லலிதாம்பிகை என்ற திருநாமத்துடன் தோன்றினாள். லலிதா ம்பிகை அசுரனுடன் போர் செய்து அவனை அழித்தாள். பூலோக தேவலோகத்தவர்களை காக்க ஒன்பது வயது சிறுமியாக (வாலை யம்மன்) அவதாரம் எடுத்த பாலாம்பிகை தனது சப்த கன்னிகள் துணையுடன் பண்டகாசூரனையும் அவனது சந்ததியையும் அழித்து. அடங்காத பெரும் கோபத்தில் உக்கிரமாக இருந்தாள். இவரை சாந்தப்படுத்த அவரது பாதத்துக்கு அடியில் ஸ்ரீ சக்கரத்தை வைத்தார் ஆதி சங்கரர். சித்தர்கள் போற்றும் வாலை சாந்த சொருபியாக "வாலை யம்மன்" ஆக காட்சி தரும் திருத்தலம் தான் வாலையம்மன் கோவில். இப்புதிய கோவிலை அமைப்பதற்காக 2011ம் ஆண்டு பழைய கோவில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இக்கோயிலில் எழுந்தருளியாக இருக்கும் வாலையம்மன். ஸ்ரீ சக்கரம் முக்கியமான கருப் பொருளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. தீராத நோய் தீர்க்கும். சந்ததி விருத்தி. தானிய விருத்தி சௌபாக்கியம் தரும் இத்திருத்தலத்தின் தல விருட்சமாக சிவலிங்கபூ மரம். வேம்ப மரம் அமைந்துள்ளது. இக்கோயிலின் தலச்சிறப்பினை நோக்கின் சூரசம்ஹாரத்துக்கு முருகப் பெருமானின் படைத்தலை சேவகராகத் திகழ்ந்த வீரபாகு முதலியார் வழிவந்த செங்குந்த வம்சத் தினரால் ஆதரிக்கப்பட்டுள்ளமை. இந்த கோயில் கடந்த நூற்றாண்டு அவதரித்த பிரபல ஈழத்து பெண் சித்தர் சடையம்மா அவர்களால் ஆதரிக்கப்பட்டது. பிரமாண்டமாக தட்ஷணாமூர்த்தி உருவச்சிலையுடன் தீர்த்தக்கேணி பிரமாண்டமாகக் காட்சி அளிக்கிறது. புதிய ஆலயத்தில் மூலஸ்தானத்தில் பழைமையான ஸ்ரீ சக்கரமும் பெரிய அம்மன் விக்கிரமும் பிரமாண்டமாகவும். பரிவார தெய்வங்களாக முறையே ஸ்ரீ பால கணபதி. ஸ்ரீ காமாஷி சமேத காமகோடீஸ்வரர். ஸ்ரீ பத்மாவதி தாயார் சமேத ஸ்ரீ பிரசன்ன வெங்கடேஸ்வர பெருமாள். ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார். ஸ்ரீ கஜவல்லி மஹாவல்லி சமேத ஸ்ரீ ஷண்முகப் பெருமான். ஸ்ரீ அஷ்டலஷ்மிகள். ஸ்ரீ ப்ரத்தியங்கிரா தேவி. ஸ்ரீ சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ நடராஜர் பெருமான். ஸ்ரீ ஐயப்பன். ஸ்ரீ சூரியன். ஸ்ரீ சந்திரன். ஸ்ரீ மஹா வாராஹி. ஸ்ரீ மஹா மாதங்கி. ஸ்ரீ மஹிசாசுரமர்த்தினி. சக்திகளுடன் கூடிய ஸ்ரீ நவக்கிரக அதிசுந்தர விமானங்களுடன் அமைக்கப்பட்ட பரிவாரக் கோவில்களும் விளங்க மேற்கு வீதியிலே ஸ்ரீ பஞ்சகங்காபுஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் விளங்க. ஸ்ரீசக்ரத்தின் சிவசக்தி ஐக்கிய வடிவில் அதிசுந்தர த்ரிதள "பராபட்டாரிகா" விமானத்தினை ஸ்ரீ பாலாம்பிகை கொண்டு விளங்க "ஸ்ரீ சக்ர ராஜ வாசல்" நவதள மஹாராஜ கோபுரமும். சதுர்த்துவார கோபுரங்களும் விளங்க நான்கு வீதிகளிலும் நால்வேத புருஷர்களும் நாத வடிவமான மணிகள் கோபுரங்களுடன் விளங்க முதலாம் பிரகாரத் தில் அஷ்டதிக்பாலகர்களும். பதினாறு திதி நித்யைகளும் சாலக்கிரகங் களில் விளங்க "அதியற்புத மந்திரமய மஹா மண்டபத்தில்" சமஸ்த தேவதைகள் சூழ நவாவரண தேவதையான ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி அமையப் பெற்றுள்ளமை சிறப்பாகும். இவற்றுடன். மஹா யக்ஞசாலை. திருப்பள்ளியறை ஆலயத்தில் அமையப்பெற்றுள்ளன. மூலஸ்தானத் தின் இரு பக்கமும் ஸ்ரீ ராஜ மாதங்கிதேவி. ஸ்ரீ மந்திர வராஹிதேவி அமைக்கப்பட்டுள்ளது. நான்கு வாசல்கள். பெரிய பிரகாரம். அழகிய கோபுரம். நாற்புறமும் சதுர் வேத மூர்த்திகளுடன் கூடிய மணிக்கோபுரம். அழகிய புஸ்கரணி என்று மின்னுகின்றது. கோயிற் திருமதிலில் எங்கும் காண அரிதாக ஸ்ரீ சக்ர தேவதைகளை திதிகளுக்குரிய திதி நித்யா தேவதைகளையும் திக் பாலகர்களையும் கூட நாம் பார்க்கின்றோம். இந்த மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கு அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தருமாறு வேண்டுகிறோம். தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நிகழும்.மண்டலங்களாக காலத்தில் உபயகாரர்களாக கலந்து கொள்ள விரும்புவோர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும். தினமும் காலை நவகலச அபிஷேகமும். மாலை ஸ்ரீ சக்ரநவாவரண பூஜையுடன் திருவீதியுலா உற்சவமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

**வே. நவமோகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna
# Call for Expression of Interest (EOI)

## PRE-QUALIFICATION OF BIDDER FOR PRINT-TO-PROFIT (P2P) MANAGED PRINT SERVICES (MPS)

**1. Introduction**

The University of Jaffna (hereafter referred to as "the University") invites Expressions of Interest (EOI) from experienced and qualified suppliers to provide Print-to-Profit (P2P) Managed Print Services (MPS). This EOI aims to identify and shortlist potential suppliers capable of delivering cost-efficient, scalable, and high-quality printing solutions tailored to the University's requirements. The selected supplier will implement a Print-to-Profit model where users pay for print services on a per-use basis, ensuring accountability, cost control, and sustainability.

**2. Project Scope**

The University seeks a supplier to manage and support its printing requirements through a Print-to-Profit (P2P) model. The scope of the project includes but is not limited to:
- Provision, installation, and maintenance of print devices (e.g., printers, copiers, scanners).
- Implementation of a Print-to-Profit billing system for charging users based on the number of pages printed.
- Monitoring and management of print usage, consumables (e.g., toner, paper), and device health.
- Provision of user support and troubleshooting services.
- Regular reporting on print usage, service performance, and device status.

Estimated Volume of Printing (for information purposes only):
- To support potential suppliers in understanding the scale of the requirement, the University estimates that the annual printing volume may range approximately between 6,000 reams of A4 and 700 reams of A3 paper. This figure is indicative only and provided solely for capacity assessment purposes. Final volume requirements and detailed specifications will be provided at the Request for Proposal (RFP) stage.

Key Objectives:
- Optimizing print usage and reducing unnecessary costs.
- Ensuring secure and reliable printing services with minimal downtime.
- Promoting environmental sustainability through waste reduction and energy efficiency.
- Providing accountability through a transparent Print-to-Profit billing structure.

**3. Potential Issues & Preventive Strategies**

The implementation of Print-to-Profit Managed Print Services may face challenges in service management, cost control, technical integration, and user adoption. To address these, the following strategies are expected in the proposal:

**3.1 Service Management:**
- Service-Level Agreements (SLAs) with guaranteed uptime and maintenance response times.
- Real-time monitoring tools for tracking usage, device health, and performance.
- Regular audits and user feedback mechanisms to ensure service quality.

**3.2 Cost Control and Transparent Billing:**
- A clear, transparent pricing model with detailed cost breakdowns for color and black-and-white printing.
- Usage monitoring by department or individual users to track and prevent overuse.
- Alerts for exceeding usage limits and controls to avoid unexpected costs.

**3.3 Technical Integration and Data Security:**
- Seamless integration with the University's IT infrastructure.
- Compliance with data security regulations (e.g., GDPR, HIPAA) and secure printing mechanisms (e.g., PIN codes, user authentication).
- Network readiness for cloud-based print management solutions.

**3.4 User Adoption and Training:**
- Comprehensive training programs to educate users on the Print-to-Profit model and efficient print practices.
- Continuous support and troubleshooting services to address user concerns.
- Clear usage guidelines to encourage responsible printing behavior.

**3.5 Environmental Sustainability:**
- Use of energy-efficient devices and eco-friendly consumables.
- Recycling programs for consumables and e-waste.
- Initiatives to reduce paper consumption and promote digital alternatives.

**4. Eligibility Criteria**

Applicants must meet the following qualifications to be considered:
- Proven experience in providing Managed Print Services, especially in a Print-to-Profit model, for large institutions or similar organizations.
- Strong technical capabilities in print fleet management, monitoring, and maintenance.
- Financial stability to support ongoing service requirements.
- Demonstrated compliance with environmental and data security standards.
- Ability to provide a transparent Print-to-Profit billing structure.

**5. Submission Requirements**

Interested parties are invited to submit the following documents:
- Company Profile, including experience in Print-to-Profit MPS and key clients served.
- Technical Proposal detailing services, monitoring solutions, and maintenance plans.
- Pricing Model, including cost per page for color and black-and-white printing and any additional fees.
- Case Studies/References showcasing similar solutions provided to institutions.
- Qualifications of Key Personnel responsible for implementation and support.
- Sustainability Statement detailing eco-friendly practices and initiatives.
- Data Security Statement outlining measures to ensure secure printing and compliance with privacy regulations.
- Any additional supporting documents relevant to the EOI.

**6. Evaluation Criteria**

EOIs will be evaluated based on the following factors:
- Experience and expertise in delivering Print-to-Profit MPS solutions.
- Technical capability and innovation in print management.
- Transparency and cost-effectiveness of the Print-to-Profit pricing model.
- Commitment to environmental sustainability.
- Data security and compliance measures.
- Customer support and training programs.
- References from clients with similar requirements.

**7. Submission Instructions**

The EOIs should be submitted to the Bursar, Finance Branch, University of Jaffna (PO Box-57, Thirunelvely, Jaffna), either by post or in person, to reach his office on or before 2:00 PM on July 30, 2025.

**8. Clarification**

For any queries or clarifications regarding this EOI, interested parties may contact Mr. K. Thirukumaran, Assistant Bursar (Supplies), via email at absp2@univ.jfn.ac.lk or by phone at 021 222 6519.

**9. Confidentiality**

All information provided by applicants in response to this EOI will be treated as confidential and used solely for the purpose of evaluating the Expressions of Interest.

**10. Next Steps**

After evaluating the EOIs, shortlisted applicants will be invited to submit a detailed Request for Proposal (RFP) for Managed Print Services. The University will select the supplier based on the evaluation of the proposals.

**11. Terms and Conditions**
- The University reserves the right to accept or reject any or all EOIs.
- Submission of an EOI does not guarantee that the applicant will be invited to submit a proposal or awarded the contract.
- The University will not be liable for any costs incurred by applicants in the preparation or submission of the EOI or for transport.

Vice Chancellor,
University of Jaffna,
Post Box - 57,
Thirunelvely, Jaffna

Date: - 06.07.2025

# மகள் வன்புணர்வு; தந்தை கைது

கொழும்பு, ஜூலை 6

மகளைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் தந்தையொருவர் சியம்பலாண்டுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமி தனக்கு நேர்ந்ததை பாடசாலையின் வகுப்பு ஆசிரியரிடம் தெரிவித்திருந்ததோடு, ஆசிரியர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரான தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

**கோழி குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு**

சுதுமலைதெற்கு மானிப்பாயில் உள்ளபண்ணையில்தடுப்பு மருந்துகள் மற்றும் வக்சின் முறைப்படி கொடுக்கப்பட்ட 400 கிராமுக்கு மேலான நிறை உடைய 1 1/2 மாத கழுத்து வெட்டி கோழி குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு.

தொடர்பு:- 0773271713

(CR/4544) J-1

**கிரவல் தேவை**

வவுனிக்குளம் பகுதிக்கு 30 டிப்பர் லோட் தரமான கிரவல் தேவை.

076 423 7053, 077 736 1215

(CS/58781) J-1

**பணிப்பெண் தேவை**

யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பெண் வேலையாள் தேவை

தொடர்புகளுக்கு:

078 376 9284

**மீசாலை கிழக்கில்**

**காணி விற்பனைக்கு**

மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு

தொடர்பு 0776 544 540 (தரகர் தேவையில்லை)

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply

Www.inaipa.com

(CS/56378) J-1

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு:

077 048 4834, 071 276 9189

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் மீது கும்பல் தாக்குதல்

## மானிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 6 கடை ஒன்றுக்கு வெளியே நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது இனந் தெரியாத குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் - மானிப்பாய் நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐவர் கொண்ட குழுவே மோட்டார் சைக்கிள்மீது தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச்சென்றுள்ளது. இதுகுறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டநிலையில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-27)

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல ஸ்ருடியோ மற்றும் கலர்லாப் ஒன்றிற்கு போட்டோகிராப்பர், கிராபிக் டிசைனர், பிறின்டர் போன்ற பணியிடங்களுக்கு முழுநேர பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**077 234 9933, 077 773 0567**

## ஆலய பராமரிப்பு சேவை

பராமரிக்க முடியாத சிறிய மற்றும் நடுத்தர மற்றும் ஏனைய இந்து ஆலயங்கள் பராமரித்து நித்திய பூசைகள் செய்து தரப்படும்.

WhatsApp: **076 578 9372**

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF EDUCATION, HIGHER EDUCATION & VOCATIONAL EDUCATION

UNIVERSITY COLLEGE OF JAFFNA

**VACANCIES**

Applications are invited from suitably qualified persons for the below mentioned posts in the University College of Jaffna.

**DEMONSTRATOR IN BUILDING SERVICES TECHNOLOGY, COSMETOLOGY, FARM MACHINERY TECHNOLOGY, MECHATRONICS TECHNOLOGY AND INFORMATION & COMMUNICATION TECHNOLOGY**

**Closing Date: 18.07.2025**

***FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7791***

Director/CEO
University College of Jaffna

06.07.2025

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## பெறுகை அறிவித்தல்.


கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/ Imp/25/ 1111-13 | Construction of Canteen at Divisional Secretariat, Kandawalai, | 100 நாட்கள் | 8.11 மில்லியன் | C8 or above, Building | ரூபா. 123,000/- 03.11..2025 வரை . | 2500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றினுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவனைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 07.07.2025ஆம் திகதியிலிருந்து 18.07.2025ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப் பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 16.07.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவ்சியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/........" என் ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 21.07.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சு.முரளிதரன்**
**திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்.**
**கிளிநொச்சி மாவட்டம்.**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 20 . 04 . 1958
மறைவு 04 . 07 . 2025

யா/ நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க.வித்தியாலயத்தில் கணினி உதவியாளராகப் பணியாற்றும்
திரு. சிவபாலன் தினோசன்
அவர்களின் பாசமிகு தந்தை

**தர்மலிங்கம் சிவபாலன்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க. வித்தியாலயம்

## மரண அறிவித்தல்



தாயின் மடியில் 08.09.1951
இறைவன் அடியில் 23.06.2025

**ஆனந்தர்.நகுலேந்திரன் (Civil. Eng)**

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தர். நகுலேந்திரன் அவர்கள் **23.06.2025** திங்கட்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தர் செல்லம்மா தம்பதிகளின் புதல்வரும், அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. துரைசிங்கத்தின் மருமகனும், யோகராணியின் அன்புக்கணவரும், டானியல், யோகானின் அன்புத் தந்தையும், சுறோஜ், ஷினா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஈவி, ஈதன், டிலான், செபஸ்ரியன், லூகஸ் ஆகியோரின் அன்பு பாட்டனாரும், காலஞ்சென்ற இந்திராணி மற்றும் இந்திரசேனன், மீனலோசனி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு இளைய சகோதரனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, மாதவாம்பிகை, அமிர்தலிங்கம் மற்றும் சாரதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.07.2025 ஞாயிற்றுக் கிழமை இன்று லண்டனில் நடைபெறும்.**

தகவல் : சகோதரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாவின் ஐந்தாம் நாள் திரு நடனத் திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சிறப்புற நடைபெற்றது. (ச-66)

# சட்டவிரோத மதுபானம்; குடும்பஸ்தருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

சட்டவிரோதமான முறையில் அதிகளவான அரச மதுபானத்தை உடைமையில் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் அண்மையில் கைதுசெய்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போதைப் பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைய கைதடி குமரநகர் பகுதியில் மேற்கொண்ட தேடுதலில் இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது. இதன்போது 216 கால்போத்தல்கள் மதுபானத்துடன் 46 வயதான ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் மதுபானப்போத்தல்கள் அரசுடமையாக்கப்பட்டதுடன் 25ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (ச-28)



## வடமாகாண...

அத்துடன் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

மத்திய மலைப் பிராந்தியங்களின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு சுமார் 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். காங்கேசன்துறை தொடக்கம் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான கடற் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 கிலோமீற்றர் வேகத்தில் காற்றுவீசும் - என்றுள்ளது. (அ-ம)

## புதிய...

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப்புதைகுழிக்கு அருகில் மேலும் பல புதைகுழிகள் இருக்கலாம் என செய்மதிப்படங்கள் மூலம் சில பகுதிகளை பேராசிரியர் ராஜ்சோமதேவ அடையாளப்படுத்தியிருந்தார். இந்த விடயம் நீதிமன்றத்தின் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கு ட்ரோன்கள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதைத் தொடர்ந்து, இரு தினங்களுக்கு முன்னர் அங்கு அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே, நேற்றையதினம் மனிதச் சிதிலங்கள் (மண்டையோடு) அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இன்றையதினம் அங்கு தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

புதிய புதைகுழியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேசசபைப் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஜூனில்...

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 11 இலட்சத்து 68 ஆயிரத்து 44 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## கிருமித்...

டுள்ளது. கடந்த 22ஆம் திகதி அவருக்கு வயிற்றுக்குத்து மற்றும் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு வீடு திரும்பியுள்ளார். இதைத் தொடர்ந்தே, மீண்டும் திடீர் சுகவீனம் ஏற்பட்டு நேற்று உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில், கிருமித்தொற்றுக் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்ஸ்ரன் தயான் அன்ரலா மேற்கொண்டார். (அ-ம-26)

## சாரதியின்...

தவிர்க்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6:30 மணியளவில் சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து சாவகச்சேரியை அண்மித்த போது சாரதிக்கு திடீரென தலைச்சுற்று ஏற்பட்டது. இதையடுத்து பேருந்து அவரது கட்டுப்பாட்டை விட்டு விலகி ஓடத் தொடங்கியது. எனினும், உடனே சுதாகரித்துக்கொண்ட சாரதி, பேருந்தை பாதுகாப்பான முறையில் நிறுத்திவிட்டு, அவரது ஆசனத்தில் சரிந்து வீழ்ந்தார். இதையடுத்து சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதுடன், பயணிகள் வேறு பேருந்தில் பயணத்தைத் தொடர்ந்தனர். (அ-ம-100)

## செம்மணிப் புதைகுழிக்கு...

நீதிகோரிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு நீதியை நிலைநாட்ட வேண்டும். இலங்கையில் தமிழர்கள் மீது தொடர்ந்து இனப்படுகொலை நிகழ்த்தப்பட்ட காலத்தில், அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு மௌனமாக இருந்தது. இது தமிழர்கள் மீதான இனப்படுகொலைகள் கட்டற்று விரிவதற்கு ஏதுவான காரணமாக அமைந்தது. அதுபோல்தான், தற்போதைய முதல்வர் ஸ்டாலின் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் மௌனமாக இருந்து வருகின்றார். எங்களின் தொப்புள்கொடி உறவுகளுக்காக முதல்வர் ஸ்டாலின் குரலெழுப்ப வேண்டும். இந்த விடயத்தில் தமிழகத்தின் கவனத்தையும், கண்காணிப்பையும் அவர் உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பது அப்பட்டமான உண்மை. அத்தகைய இனப்படுகொலைகளை முன்னெடுத்த இராணுவத்தினரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வலுவாகத் தண்டிக்க வேண்டும். இந்த விடயத்தில் இந்திய அரசாங்கம் வழக்கம்போல் கள்ளமௌனம் காக்கக்கூடாது. குறிப்பாக தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் தமிழக மக்களின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில் இலங்கை அரசை கண்டித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் - என்றனர். (அ-ம-66)

## 3 மனிதச்...

வரை 45 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் பத்தாம் நாள் நடவடிக்கைகள் நேற்றையதினம் இடம்பெற்றன. இதன்போதே, மூன்று என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 45 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 42 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர்.

நேற்றைய அகழ்வுப் பணிகளின்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் மற்றும் தொல்லியற்துறை விரிவுரையாளர்கள் வருகைதந்து அகழ்வுப் பணிகளை அவதானித்துச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செம்மணிப் புதைகுழியில்...

நேற்றுமுன்தினம் மாலை அவதானிக்கப்பட்ட இந்தக் கொள்கலன் வெடிபொருள்கள் வைப்பதற்கு இராணுவத்தினர் பயன்படுத்தும் கொள்கலனை ஒத்ததாகவும், சந்தேகத்துக்குரியதாகவும் இருந்ததால் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்தே, நேற்றுக் காலை வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டு அது மீட்கப்பட்டது. அந்தக் கொள்கலன் நீதிமன்றக் கட்டுக்காவலின் கீழ் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. அது ஆயுதங்கள் அடங்கிய கொள்கலனாகக் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. ஆய்வின் பின்னர் அதுதொடர்பான தகவல்கள் வெளிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

**வீடு வாடகைக்கு**
நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறிகியகாலத்திற்கு (நாளாந்த அடிப்படையில்) வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 443 2989

**தேவை**
யாழ். நகரில் இயங்கும் பொதிகள் சேவைகள் நிறுவனத்துக்கு பணியாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
யாழ். நகரப்பகுதிக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 0770077034

**வேலைவாய்ப்பு**
மானிப்பாயில் இயங்கிவரும் New Lovers Corner கடைக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- விற்பனையாளர் (Sales Girl)
- அழகு கலை நிபுணர் (Beautician)
077 073 8643, 021 225 6444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வகை பல் வைத்திய சேவைக்கு.... ஆரியகுளச் சந்தியில், Professional Dental Care



INTERNATIONAL DENTAL CARE
INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD
professional Dental Care in Sri Lanka
IDC

**Colombo Branch**
N0. 79/9, W.A.Silva Mw,
Wellawatta, Colombo - 06,Sri Lanka.
Tel : + (94) 11 2507070,
Mob : + (94) 77 0139372, + (94) 77 0139376
W.App : + (94) 76 5224273

**Vavuniya Branch**
Raaj Medical Lab.
No:10, Bazaar Street, Vavauniya, Sri Lanka.
Tel : + (94) 24 2221577
Mob : + (94) 77 0139374
W.App : + (94) 77 059 5221

**Jaffna Branch**
N0. 84, Stanly Road,
Jaffna, Sri Lanka.
Tel : + (94) 21 2220833
Mob : + (94) 77 0031547
W.App : + (94) 77 003 1548

## Shop Assistant / worker

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.
- சம்பளம் : 65,000/=
- Location : S.A.W & Sons, Hambantota

Contact: 077 480 3379

## Spoken English & Grammar Classes

பல வருட அனுபவ ஆசிரியர்
K.Ganesh B.A Pera
Grade 7 to GCE OL, AL,
பட்டதாரிகள்
International School Students
அன்னசத்திர வீதி யாழ்ப்பாணம்
077 766 8725

## வேலையாட்கள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- அனுபவம் மிக்க மேசன் சம்பளம் - 4000/-
- உதவி மேசன் - 3000/-

076 096 9728

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு, NK மண்டபத்திற்கு முன்னால் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
076 150 3547
070 3442 232

## விற்பனைக்கு உண்டு

- கொக்குவில் பிரம்படியில் ஒரு பரப்பு காணி
- வீட்டுத்தளபாடங்கள்
- அங்கவீனர் பாவிக்கும் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் (Honda)

என்பன விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 076 904 5403

## Apartments, வீடுகள் விற்பனைக்கு


வெள்ளவத்தையில் 670. 950.1200.1550Sqft 3BR, 2BathR Apartments.3p, 5p, 7p, 8p,11p, 20p காணிகள். தெஹிவளையில் 1050,1300,1470Sqft Apartments.

Lands and Houses for sale.
கல்கிசையில் 3p, 4p, 6p, 11p, 25p.

இரத்மலானை, கொட்டாஞ்சேனை, வத்தளை, தெமட்டகொடயில் 85p Land for sale மற்றும் யாழ்ப்பாணம், நல்லூர், A9Rd கச்சேரி, பருத்தித்துறையில் காணிகள், வீடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 306 0013


## யன்னல்கள், கதவுகள் விற்பனைக்குண்டு



சிறிது காலம் கொழும்பில் பயன்படுத்தப்பட்ட Frame உடன் கூடிய கதவுகள் Steel grills இணைக்கப்பட்ட யன்னல்கள் குறைந்த விலையில் நீர்வேலியில் விற்பனைக்குண்டு

தொடர்புக்கு: 077 311 4738

## மரண அறிவித்தல்



## நமசிவாயம் செல்வராசா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.06.1949 | 06.29.2025 |

காரைநகரை பிறப்பிடமாகவும் நியூயோர்க் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் செல்வராசா (செல்லத்தம்பி) அவர்கள் 29.06.2025 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - ராசலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், யோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், யோகராசா, சுதர்சினி, மனோ ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாய்முகுந்தன், தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தருமராசா (பாரிஸ்), காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் இராசையா (பாரிஸ்), தேவராசா (இலங்கை), தங்கம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகாமசுந்தரி காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் செல்வதி, சீவரத்தினம், சிவதேவி, நாகேஸ்வதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.07.2025 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பின்னர் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சாயி முகுந்தன்
(அமெரிக்கா)

(CS 58765) E

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் அதிகார செல்லமுத்து வீதியில் (சங்கரப்பிள்ளை வீதிக்கு அருகில்) 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- 1 பரப்பு - 55 லட்சம்
- விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 534 3697
Whats app: +140 547 61531

## காணி விற்பனைக்கு

மாலுசந்தி நாவலடி பிரதான வீதியில் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள 7 பரப்பு குளி 14. 4/32 விஸ்தீரணமுள்ள வெட்டுக்கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 262 5699

## கவர்ச்சிகரமான ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு

- Operation Manager - செயற்பாட்டு முகாமையாளர்
- Marketing Manager - சந்தைப்படுத்தல் முகாமையாளர்
- Sales Manager - விற்பனை முகாமையாளர்
- Digital Marketing
- Pharmacist - மருந்தாளர்
- Sales Girls - விற்பனையாளர் பெண்கள்
- Supervisior - மேற்பார்வையாளர்
- House Keeping Staff - துப்பரவுப்பணியாளர்

New Yarl Baby Needs & Pharmacy & New Sunrise Medi Clinic
580, Hospital Road, Jaffna.

Phone: 021 222 6069/ 021 222 8013/ 071 847 5531
Email: Sunrisemediclinic@gmail.com
ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரலாம் : 09.07.2025 (புதன்)

## விற்பனை உதவியாளர் தேவை

ஆண், பெண் விற்பனை உதவியாளர் தேவை.
ஆண் (Light Vehicle License உள்ளவர்)

075 258 9665, 077 851 1265

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல Hotel ஒன்றிற்கு இரவு நேர வேலை ஆட்கள் தேவை.(ஆண்கள்)
- Ironing Bedsheets
- Cleaning
- தேவை ஏற்படின் Rooms Cleaning
- ஏனைய வேலைகள்

நேரம் - இரவு 7.00 - காலை 7.00 ( 6 நாட்கள் வேலை )
சம்பளம் - RS 40,000 + Comission

தொடர்பு:- 077 337 0207

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper


நிலையைக்கண்டு கொள்வதற்கு நினைந்துஉருகி வாடி
நிர்மலமாம் ஐயன்பதம் தினந்தினமுந் தேடி
கலைஅறிந்து வாசியையும் கட்டுடனே பிடித்தோம்
கனல் எழுப்பி மூலமதைச் சுகமுடனேபடித்தோம்.
– மௌனச்சித்தர்

A

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆனி 22 ஞாயிற்றுக்கிழமை (06.07.2025) சிகரம் :16

# புதிய உள்ளூராட்சிசபைகள்

## பழைய சவால்கள்



○ நிலாந்தன்

இந்தக் கட்டுரையை ஒரு கதையில் இருந்து தொடங்கலாம். புதிய உள்ளூராட்சிசபைகள் உருவாக்கப்பட்டிருக்கும் பின்னணிக்குள் இந்தக் கதைக்கு அதிக முக்கியத்துவம் உண்டு.

போர்க்காலத்தில் மல்லாவியில் நடந்த கதை இது. மல்லாவிச்சந்தையில் கனெக்ஸ் என்று அழைக்கப்படும் கனகரட்ணம் மீன் வாங்க வந்திருந்தார். அவர் அப்பொழுது வெற்றிலை சப்பிக்கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் வாய்க்குள் இருந்த வெற்றிலை எச்சிலை அப்படியே நிலத்தில் துப்பினார். அதை அங்கே இருந்த அன்பு மாஸ்டர் கண்டுவிட்டார். அவர் கனெக்ஸை நோக்கிப் பாய்ந்தார். “ஒரு பொது இடத்தில் அதுவும் சாப்பாட்டுப் பொருள்கள் விற்குமிடத்தில் எப்படி சுகாதாரக்கேடான விதத்தில் வெற்றிலையைத் துப்புவாய்?” என்று அவர் கனெக்ஸை நோக்கிக் கேட்டார். கனெக்ஸ் திருப்பிக் கேட்டார் “நான் துப்பியதால் உனக்கு என்ன வந்தது? நான் யாருடைய முகத்திலும் துப்பவில்லை. நிலத்தில்தானே துப்பினேன்?” என்று. அன்பு மாஸ்டர் விடவில்லை. “நீ துப்பிய நிலம் பொது நிலம். சுற்றிவர மீன்கள், மரக்கறிகள் விற்கப்படும் இடம். உன்னுடைய துப்பலில் மொய்க்கும் இலையான் இங்குள்ள சாப்பாட்டுப் பொருள்களின்மீதும் மொய்க்கும். எவ்வளவு அசுத்தம்? எவ்வளவு ஆரோக்கியக் கெடுதி?...” என்று கூறி கனெக்ஸை சண்டைக்கு இழுத்தார்.

இப்படி இரண்டு பேரும் வாக்குவாதப்பட சந்தைக்கு வந்தவர்கள், சந்தை வியாபாரிகள் என்று அனைவரும் இந்த இரண்டு பேரையும் சூழ்ந்துவிட்டார்கள். இருவருமே ஒரு பொது இடத்தில் எச்சில் துப்புவதில் இருக்கக்கூடிய சுகாதாரக்கேடான விடயங்களை தர்க்கபூர்வமாக உரையாடத் தொடங்கினார்கள். சூழ்ந்திருந்த மக்கள் இரண்டு பேரையும் விலக்குப் பிடிக்க முயற்சித்தார்கள். அதேசமயம் அந்த உரையாடலில் மக்களும் ஈடுபடத் தொடங்கினார்கள். ஆனால் ஒரு கட்டத்தில்தான் எல்லாருக்கும் தெரிந்தது அது ஒரு நாடகம் என்று. சந்தைக்குள் சுகாதார விழிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கனெக்ஸும் அன்பு மாஸ்டரும் இணைந்து தயாரித்த கண்ணுக்குப் புலனாகாத நவீன நாடகம் அது.


அன்பு மாஸ்டர் ஒரு நாடகச் செயற்பாட்டாளரும் அரசியல் செயற்பாட்டாளரும் ஆவார். போர்க்காலத்திலேயே இறந்துவிட்டார். கனெக்ஸ் ஒரு நாடகச் செயற்பாட்டாளரும் அரசியல் செயற்பாட்டாளரும் ஆவார். நாலாம் கட்ட ஈழப்போரில் உயிர் நீத்தார். இருவரும் இப்பொழுது உயிரோடு இல்லை. ஆனால் அவர்கள் இரண்டு பேரும் எதற்காக நாடகமாடினார்களோ அந்த விடயம் இப்பொழுதும். கிட்டதட்ட இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னரும் உண்டு. அதுதான் சந்தைக்குள் சுகாதாரச் சீர்கேடுகள். யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய மரக்கறிச் சந்தை திருநெல்வேலியில் உள்ளது. அதற்குப் பின்புறம் உள்ள சிறிய பாதை சில சமயங்களில் கழிப்பறையாகவும் குப்பைக் கூடையாகவும் காணப்படும். தமது வீட்டுக்கழிவுகளை அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அந்த வீதியில் கொண்டு வந்து போடுகிறார்கள். இத்தனைக்கும் அந்த வீதி வளைவில் ஒரு பாடசாலை உண்டு. சில சமயங்களில் அந்த வேலியோடு நின்று சிறுநீர் கழிப்பவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களில் பெரும்பாலானவர்கள் சந்தை வியாபாரத்தோடு தொடர்புடையவர்கள்.

இது சந்தைக்கு வெளியே. சந்தைக்கு உள்ளே போனால், அங்கே மரக்கறிகள் பரப்பப்பட்டிருக்கும் அதே தளத்தில்தான் வியாபாரிகள் தமது கால்களைப் பரப்பிக்கொண்டு அமர்ந்திருப்பார்கள். அதாவது விற்கப்படும் பொருள்களை வைப்பதற்கு உயரமான ஏற்பாடு இல்லை. அதனால் வியாபாரிகள் மரக்கறிகளை பரப்பிவைத்திருக்கும் அதே இடத்தில் சிலசமயம் சிலர் செருப்புக்கால்களோடு இருப்பார்கள். அதே செருப்போடுதான் அவர்கள் கழிப்பறைக்கும் போகிறார்கள். சில வியாபாரிகள் செருப்பைக்கீழே கழற்றி விடுவதுண்டு.

அதுமட்டுமல்ல. சந்தையின் மூலை முடுக்குகளில் வெற்றிலைத் துப்பல்களைக் காணலாம். துப்புவது யார் என்றால் வியாபாரிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும்தான். சந்தைக்குப் பொருள்கள் வாங்க வருபவர்கள் அவ்வாறு துப்புவது குறைவு. பொதுச் சுகாதாரச் சட்டத்தின்படி பொது இடங்களில் துப்புவது சட்டவிரோதமானது. ஆனால் அதைச் சட்டத்தால் மட்டும் திருத்தமுடியாது. ஏனென்றால் அது ஒரு பண்பாடு. அவ்வாறு துப்பாமல் விடுவதனை ஒரு பண்பாடாக மாற்ற வேண்டும். யார் மாற்றுவது ?

யாழ். நகரப்பகுதியை அண்டியுள்ள சந்தைகளில் கல்வியங்காட்டுச் சந்தை தொடர்பாக முறைப்பாடுகள் அதிகம். அந்தச் சந்தைக்கு ஒரு சாதிப்பெயர் வேறு வைத்திருக்கிறார்கள். அங்கு வாங்கிய மீனில் இரசாயன வாடை வீசுவதாக திருப்பிக் கொடுத்தவர்கள் உண்டு. பொதுச் சுகாதாரப் பரிசோதர்களிடம் முறைப்பாடு செய்தவர்களும் உண்டு. ஒரு முறை அவ்வாறு முறைப்பாடு செய்த போது 'பி.எச்.ஐ.' சொன்னார் “அந்த இரசாயனத்தை சோதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இங்கு யாழ்ப்பாணத்தில் இல்லை. அதனால் அந்த மீனை அநுராதபுரத்துக்கு அனுப்பி எடுக்கவேண்டும். அதுவரை அந்த மீனைக் கெடாமல் வைத்திருக்கவும் வேண்டும்” என்று.

கல்வியங்காட்டுச் சந்தையில் வாங்கிய மீனில் போமலின் வாடை வீசியதாக முறைப்பாடுகள் உண்டு. ஓர் ஆசிரியர் சொன்னார், அவர் வாங்கிய மீனில் அவ்வாறு போமலின் வாடை வீசியதாகவும், எனவே அந்த மீனைக் கொண்டுபோய் குறிப்பிட்ட வியாபாரியிடம் கொடுத்து “நீ ஏமாற்றி விட்டாய்” என்று ஆத்திரப்பட்டபொழுது. அந்த வியாபாரி சொன்னாராம் “இந்த மீனைத்தான் கூலர் வியாபாரிகள் நூற்றுக்கணக்கான கிலோக்கள் வாங்குகிறார்கள். நீங்கள் ஒரு கிலோ வாங்கிவிட்டு இப்படிக் கேட்கிறீர்களே?” என்று. இதை இவ்வாறு எழுதுவதன் பொருள் யாழ்ப்பாணத்தின் ஏனைய சந்தைகளில் மீன்களில் இரசாயனம் கலக்கப்படுவதில்லை என்பதல்ல. மேலும் கல்வியங்காட்டுச் சந்தையில் உள்ள எல்லாருமே இரசாயனம் கலந்து மீனை விற்கிறார்கள் என்ற பொருளிலும் அல்ல. இப்படித்தான் இருக்கிறது பொதுச்சந்தைகளில் சுகாதாரம். இப்பொழுது புதிய உள்ளூராட்சிசபைகள் வந்துவிட்டன. மேற்சொன்ன விடயங்களில் உள்ளூராட்சிசபைகள் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றன ?



குப்பை ஒரு தீராப் பிரச்சினை. சந்தைச் சுற்றுச்சூழலில் மட்டுமல்ல பெரும்பாலான வீதிகளில் குப்பை ஒரு பிரச்சினை. குப்பை அள்ளும் வாகனம் வராத நாள்களில் மதில்களில் குப்பைப் பைகள் தொங்கும். ஏனெனில், கீழே வைத்தால் கட்டாக்காலி நாய்கள் பைகளைக் குதறிவிடும். சில மறைவான வீதித் திருப்பங்களை அந்த ஊர் மக்களே தற்காலிக குப்பைத் தொட்டிகளாகப் பயன்படுத்துகிறார்கள். அங்கு குப்பை கொட்டவேண்டாம் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்புப் பலகைகள் நடப்பட்டிருக்கும். அல்லது அந்த மதிலுக்கு அல்லது வேலிக்குச் சொந்தமான வீட்டுக்காரர்கள் அவ்வாறான அறிவிப்புகளை ஒட்டியிருப்பார்கள். எனினும், எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு குப்பைகள் கொட்டப்படும்.


இதனால் வெறுப்படைந்த வீட்டுக்காரர்கள் தமது வீட்டு மதிற் சுவரில் அல்லது வேலியில் எழுதிவைத்திருக்கும் வாசகங்கள் அவர்கள் எந்த அளவுக்குக் கோபமாக இருக்கிறார்கள் என்பதை நமக்கு உணர்த்துகின்றன. அந்த வாசகங்கள் வருமாறு…“இங்கே குப்பை போடுகிறவன் உன்னுடைய பெண்டாட்டியையும் கொண்டு வந்து போடு” என்று ஒரு வாசகம். “இங்கே குப்பை போடுகிறவன் ஒரு மன நோயாளி” இது இரண்டாவது வாசகம். “இங்கே குப்பை கொட்டினால் உன்னைப் பேய் பிடிக்கும்” இது மூன்றாவது வாசகம். “இங்கே குப்பை கொட்டுகிறவன் ஒழுங்காகப் பிறக்காதவன்”…..என்று ஒரு வாசகம். இவைபோல பல்வேறு விகாரமான, விபரீதமான அறிவிப்புகளைப் பார்க்கமுடியும்.

ஒரு வீட்டுக்காரர் தன்னுடைய வீட்டு வெளி மதிற் சுவரில் சுவாமிப் படங்களை ஒட்டிவிட்டார். ஆனால் சுவாமிப் படங்களுக்குக்கீழேயும் குப்பைகள் கொட்டப்பட்டன. குப்பைகளைக் கொட்டுபவர்கள் யார் என்று பார்த்தால் அதில் படித்தவர்கள் உண்டு, விவரம் தெரிந்தவர்கள் உண்டு. யாரும் பார்க்காத ஒரு நேரத்தில், யாரும் பார்க்காத விதமாக அவர்கள் குப்பையை அந்த இடத்தில் தட்டிவிட்டுப் போவார்கள். அங்கே கமரா பொருத்தினா

06



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கொந்தளிச்சான் குஞ்சுகளுக்கு வணக்கம்...!

'அண்ணை உலகப் பொலிஸ்காரன் வாங்கின அடியைப் பாத்தியே. உதுதான் மற்றவனை நித்திரை கொள்ளவிடாமல் பண்ணினால் ஒருநாள் தானும் நித்திரை கொள்ளாமல் தவிக்கவேண்டி வரும் எண்டு சொல்லுறது. முள்ளிவாய்க்காலிலை நாங்கள் பட்ட அவலம் இண்டைக்கு அவையள் படுகினம்' - எண்டு சொல்லிக்கொண்டு பரமசிவம் காலத்தாலையே வந்திட்டான்.

'ஆர் அது உலகப்பொலிஸ் பரமசிவம்?' எண்டு கேட்டன்.'அது அமெரிக்கா தான்' எண்டு அவன் சொன்னான். 'அவனுக்கு எங்கை அடி விழுந்தது? அது இஸ்ரேலுக்கெல்லோ ஈரான் அடிச்சது!' எண்டு நான் சொன்னன்.

'அண்ணை உனக்கு அடிச்சால் என்ன? உன்ரை குடும்பத்திலை ஒராளுக்கு அடிச்சால் என்ன? எல்லாம் ஒண்டுதான்.உங்கடை குடும்ப ஆட்களின்ரை பேருக்கு முன்னாலை ஆற்றை பேர் இருக்கு? உன்ர பேர்தானே இஸ்ரேல் அமெரிக்காவின்ரை செல்லக் குழந்தையெல்லே. அப்ப நான் சொன்னதிலை என்ன பிழை?' - எண்டு பட்டிமன்றம் நடத்தினான்.



## அவசரமா ஒரு கடுதாசி

'சரி எங்கையோ நடக்கிற சண்டைக்கு நீ ஏன் இஞ்சை சன்னதம் கொள்ளுறாய் பரமசிவம்? 'எண்டு நான் கேட்டன்.

'அன்னமுத்தண்ணை, நீ இன்னும் கிணத்துத் தவளை மாதிரித்தான் இருக்கிறாய்? உன்னட்டை மோட்டார் சைக்கிள் நிண்டால்தானே உனக்குப் பிரச்சினை தெரியும்.நீ ஒருக்காப் போய் மண்ணெண்ணெய், பெற்றோல் கியூவரிசை யிலை நிண்டால்தான் அதின்ரை கஷ்ட நட்டம் உனக்குத் தெரியும். இது வீட்டுக்கை உனக்கு எல்லாம் இருக்கு. உன்ரை இராசி பலனுக்கு சவுதிக்காரன் கொண்டுவந்து பெற்றோலை உன்ரை வீட்டிலை தந்தாலும் ஆச்சரியப்படுகிறதுக்கில்லை.உன்ரை தலைஎழுத்து அப்பிடி'

'சரி இப்ப பெற்றோல்செட்டிலை சனமே?' எண்டுகேட்டன். 'இல்லை அங்கை சண்டை நிண்டிட்டுது. அதாலை இஞ்சையும் அமளி இல்லை. எல்லாரும் தன்தன் பாட்டிலை போவிட்டினம்' எண்டு பரமசிவம் சொன்னான். அவன் வந்ததைப்பாக்க உடனை போகமாட்டான் எண்ட மாதிரிப் பட்டுது.

'வந்தநோக்கம் என்ன பரமசிவம்? 'எண்டு சொரியலாக் கேட்டன்.

'செம்மணிக் கதையைக் கேட்டனியே? பாத்தியே விளையாட்டை? எமன் வந்தாலும் உவங்களைத் திருத்தேலாது. ஞாயத்தை ஆர் வேணும் எண்டாலும் கேக்கலாம். எதிர்ப்பை ஆர் வேணும் எண்டாலும் காட்டலாம். ஆனால் எதுக்கும் இடம் பொருள் ஏவல் எண்டு ஒண்டு இருக்கு. எல்லாத்தையும் எல்லாரும் எல்லா இடத்திலையும் செய்யேலாது. செய்யவும் கூடாது. அதைச் சரிவர விளங்கிக் கொள்ளவேணும்.தடி எடுத்தவன் தண்டல்காரன் எண்டது அப்ப. இப்ப பிடிச்சுக் கைகாலை முறிச்சு அடுப்புக்கை வைச்சிடுவங்கள் நிலைமை பிழை.அதுக்காக கண்டபடி கத்திறதே? ஐரோப்பாவிலை கள்ளனையும் கள்ளன் எண்டு சொல்லேலாது. கள்ளன் எதிரா வழக்குப் போடலாம். அப்பிடிச் சொன்னவனையும் உள்ளை தள்ளலாம்.

இது கலாசாரம் பண்பாடு எண்டு ஒண்டும் தெரியாததுகள் எல்லாத்துக்குள்ளையும் நிக்கிதெல்லே! அதிலை கொஞ்சம் தடியளிலை கான்போனைக் கட்டிக்கொண்டு நாயா பேயா இரவு பகல் எண்டு பாராமல் அலையிதுகள். அதுகளுக்கு இன்மை வறுமை தெரியாது.நல்லது கெட்டது தெரியாது. நாங்கள் மக்களுக்கு நன்மை செய்யத்தான் திரியிறம் எண்டு சொல்லிக்கொண்டு யூரியூப்பிலை எல்லாத்தையும் நாயின்ரை சத்திமாதிரிக் கக்குவினம். அதாலை வாற நன்மை தீமை தெரியாது. அவைக்கு என்ன பார்வையாளர்கள் கூடினாச் சரி. காசு வரும்.

அண்ணை இப்ப உங்கடை வீட்டிலை ஒரு கலியாணவீடு எண்டு வைப்பம். நீங்கள் எல்லாரையும் கூப்பிடுவியள்.அதுக்கை நான் வந்து நிண்டு கொண்டு எனக்குப் பிடியாத ஆக்களோடை கொளுத்தாடு பிடுக்கிறதே பண்பு.அதுவும் ஒரு பொது நிகழ்வு எண்டால் இன்னும் பொறுப்பா நிக்கவேணும்.

செம்மணிப் புதைகுழி எண்ட விசயம் கனகாலத்துக்கு முன்னம் நடந்தாலும் இப்ப இந்தச் சூழ்நிலையிலை ஒரு பெரிய விசயம்.அதுவும் ஐ.நா.விலை இருந்து அதை நேரிலை பாக்க ஆணையாளர் வாறான்.அந்த நேரத்திலை ஒற்றுமையா நிண்டு அவனுக்கு சரியான விசயத்தை விளங்கப்படுத்திறது முக்கியமோ? இல்லாட்டிச் சீ.வி.கே. ஐயும் சாணக்கியனையும் சந்திரசேரத்தையும் துரத்திறது முக்கியமோ?அதுக்காக சீ.வி.கே. திறமான ஆள் எண்டு சொல்ல வரேல்லை. அவர் முழுத் தமிழ்ச் சனத்தையும் அவையின்ரை அனுமதி இல்லாமல் ஸ்ரீதர் தியேட்டருக்கை விட்டது பிழைதான். அதைத் தட்டிக்கேட்டு அவருக்குரிய தண்டனையைக் குடுக்க எத்தினை ஜனநாயக வழியள் இருக்கு? அடுத்தது எரியிற நெருப்பிலை எண்ணெய் விடுகிற மாதிரியான செயற்பாட்டையும் செய்யக்கூடாது.வலு நிதானமாகச் செய்யிற பொறுப்பு எல்லாருக்கும் இருக்கிறதையும் விடச் சாமிமாருக்கு அதிகம் இருக்கு. பாருங்கோ மட்டக்களப்புத் தேரரைப் பாக்க எவ்வளவு அருவருப்பா இருக்கு? அந்தாள் "பறைத் தெமிழா" எண்டு கத்தேக்கை எவ்வளவு கோபம் வருகிது. அதைப் பாக்கேக்கை துறவியள் அரசியலுக்கையோ பொது வாழ்க்கைக்கோ வரப்பிடாது எண்டு சட்டம் கொண்டு வரவேணும் எண்ட நினைவுவரும். என்னைப் பொறுத்தவரை துறவி துறவியாக இருக்க வேணும். அவர் அறத்தைப் போதிக்கவேணுமேயொழிய சனத்தைக் குழப்பிவிட்டுக் கூத்துப் பாக்கேலாது எண்டதுதான் என்ரை கருத்து.

இப்ப பாருங்கோ கடைசியா என்ன நடந்திது? சில நிமிஷ நேரம் நடந்த கூத்து இரண்டு மூண்டு நாளா நடந்த எழுச்சியை மழுங்கடிச்சுப் போட்டுது. ஐ.நா. வந்த முக்கியத்துவத்தையும் இல்லாமல் ஆக்கிப்போட்டுது.இப்ப 'சீ.வி.கே.' யைக் கலைச்சது சரியோ பிழையோ எண்டதைப் பற்றின பட்டிமன்றம் நடக்குதே ஒழிய செம்மணிப் புதைகுழியைப் பற்றிக் கதைப்பாரில்லை.சனம் அதை மறந்து போச்சுது. எதுக்காகச் செம்மணியிலை கூடினம் எண்ட அறிவே ஒருத்தரிடமும் இல்லை.

அதுக்கை அந்தக் கோமாளியொருத்தர் வந்து நிண்டுகொண்டு கொஞ்ச வீடியோக்காரரையும் வைச்சுக்கொண்டு தன்ரை கோமாளிக் கதையும் நக்கலும் கூத்தும். கேவலத்திலும் விடக் கேவலம். எல்லாத்துக்கும் ஒரு முடிவு வரத்தானேவேணும்"

இஸ்ரேலுக்கு ஈரான் அடிச்ச ஏவுகணையள் மாதிரி விடாமல் பொழிஞ்சுபோட்டு பரமசிவன் வெளிக்கிட்டான். அவன் சொன்னதை மனதுக்க வைச்சிருக்கேலாதுதானே.அதுதான் இந்தக் கடுதாசி மூலம் உங்களுக்கும் தெரியப்படுத்திக் கிடக்கு. அடுத்த கடிதத்தில் சந்திப்பம்.

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து

---

எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்



## எந்தப் பக்கம் சாய்வார்?

என்னதான் பலமான அரசாக இருந்தாலும் அதற்குள் சில பிளவுகள் இருக்கத்தான் செய்யும். அப்படித்தான் இந்த அரசிலும்.ஜே.வி.பி.யும் தேசிய மக்கள் சக்தியும் இணைந்ததுதான் இந்த அரசு. அங்கேதான் பிரச்சினை.சர்வதேசக் கொள்கை தொடர்பில் இந்த அரசுக்குள் இரண்டு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு தரப்பு சீனாவின் பக்கம் ஜனாதிபதியை இழுக்கிறது. அடுத்த தரப்பு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் பக்கம் இழுக்கிறது.

ஜே.வி.பி. சீனாவின் பக்கம்.பிரதமர் ஹரிணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மேற்கு நாடுகளின் பக்கம்.

இந்த நிலையில்தான்,ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா, சீனாவுக்கு 10 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனா அதிகாரிகள் பலரைச் சந்தித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். இப்போது பிரச்சினை என்னவென்றால் ரில்வின் உள்ளிட்ட ஜே.வி.பி. தரப்பு சீனாவின் பக்கமும் ஹரிணி உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி அமெரிக்காவின் பக்கமும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இழுப்பதுதான். ஆனால் எந்தப் பக்கம் சாய்வதென்று தெரியாமல் நடுவில் சிக்கித் தவிக்கிறாராம் ஜனாதிபதி. இருந்தாலும், அவர் அடிப்படையில் சீனாவின் அபிமானிதான்.



## இடையில் போகும் ஸ்டைல்!

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் தவிசாளர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் புத்தக வெளியீடு ஒன்று கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்றது.

அதில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பல அரசியற் தலைவர்கள் கலந்துகொண்டனர்.நிகழ்வு தொடங்கி சிறிது நேரத்திலேயே சஜித் எழுந்து சென்றுவிட்டாராம். அங்கிருந்த எம்.பி. ஒருவர் அதை விமர்சித்து அருகில் இருந்த இன்னொரு எம்.பி.யிடம் கூறினார்.

" அந்த ஆள்..அவங்கட கட்சியின் மே தினக் கூட்டத்திலேயே முழுசா நிற்காத ஆள்.இப்படி இடையிலேயே போவதுதான் அவரது ஸ்டைல் ." என்றார் மற்றொரு எம்.பி.


அதை அப்படியே ஆமோதித்தனர் அருகில் இருந்த மேலும் பல எம்.பி.க்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெரா

(சென்றவாரத் தொடர்ச்சி)

# செம்மணி: முடிவுறாப் புதைகுழிகளின் கதை



## சித்திரவதை

மற்றொரு சம்பவத்தில் யோகேஸ்வரன் என்பவர் கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் தயா கட்டடத்தில் உள்ள முகாம் படையினர் அவரைக் கைதுசெய்தனர். அடுத்தநாள் "சி" வதை முகாமுக்குக் கொண்டு சென்றனர். இந்தமுகாம் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்தது. பிரஸ்தாப நபரை விடுவிக்குமாறு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவை அந்த முகாமுக்கு எடுத்துச் சென்றேன்.

அங்கு அவர் தலைகீழாகக் கட்டப்பட்டிருந்தார். பிளேட்டினால் அவரது உடலில் வெட்டிக் காயப்படுத்திக் கொண்டிருந்தனர். கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா, லெப்டினன்ட் துடுகல்ல, உதயமார ஆகியோரே இந்தச் சித்திரவதையை செய்துகொண்டிருந்தனர். அந்தச் சித்திரவதை முகாமில் பாவித்த பொருள்கள் இப்போதும் அங்கிருக்கின்றன. (வாக்குமூலம் கொடுக்கப்பட்ட காலம்) அந்த முகாமில் இருந்த நபர் ஒருவரைப் பொல்லால் தாக்கிக் கொலை செய்து அங்குள்ள வீடு ஒன்றின் முன்னால் புதைத்தார்கள்.



குற்றவாளியொருவர் அழைத்துச்செல்லப்படுகிறார்...



குற்றவாளியொருவர் அழைத்துச்செல்லப்படுகிறார்...

## பாஸ் பெற வந்தோருக்கு ஏற்பட்ட கதி

அரியாலையைச் சேர்ந்த பார்த்தீபன், சுதாகரன் என்ற இரு இளைஞர்கள் கைதடி சென்று வியாபாரம் செய்ய பாஸ் பெற்றுத்தருமாறு என்னிடம் கேட்டார்கள். இது குறித்து கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தனவிடம் கேட்டேன். அவர்களை முகாமுக்கு வருமாறும், அங்கு வைத்து பாஸ் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தகவலை அந்த இளைஞர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் முகாமுக்குச் சென்றனர். மறுநாள் அந்த இளைஞர்களின் உறவினர்கள், அந்த இளைஞர்கள் இருவரும் இன்னும் வீட்டுக்குத் திரும்பிவரவில்லை என்று என்னிடம் தெரிவித்தனர் அந்த இளைஞர்களுக்கு. கைதடியில் வியாபாரஞ் செய்ய அனுமதிக்கடிதம் வழங்குவதாகத் தெரிவித்த கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன, லெட்டினன்ட் துடுகல்ல ஆகியோர் அந்த இளைஞர்கள் இருவரையும் தலைகீழாகக் கட்டித் தூக்கிவிட்டுத் தாக்கியதைக் கண்டேன். மறுநாள் இரு இளைஞர்களும் இறந்துவிட்டனர்.

அரியாலை முகாமில் பணிபுரிந்த அப்துல் நஸார், ஹமீத் சமரசிங்க ஆகியோர் நன்றாகத் தமிழ் கதைப்பார்கள். அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைக் காட்டுமாறு என்னிடம் கேட்டார்கள். இரவு நேரத்தில் அந்த வீட்டைக் காட்டினேன். அங்கு ஓர் ஆணும், பெண்ணும் இருந்தார்கள்.

"அந்த வீட்டின் சொந்தக்காரர் எங்கே?" என்று அவர்களிடம் கேட்டோம். "முன்வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று பதில் அளித்தனர். அதையடுத்து கப்டன் லலித் ஹேரவகேயும், அப்துல் நஷார் ஹமீத்தும் அந்த வீட்டுக்குச் சென்றனர். அங்கிருந்த இளம் தம்பதியினரைக் கைதுசெய்தனர். அவர்களை முதலில் "சி" சித்திரவதை முகாமுக்குக் கொண்டுசென்றனர்.



கிருசாந்தி ராசம்மா பிரணவன்

பின்னர் இருவரையும் செம்மணியில் உப்பளப் பகுதிக்குக் கொண்டுசென்றனர். அவ்வாறு அவர்களைக் கூட்டிச்செல்லும்போது மண்வெட்டியை எடுத்துவரும்படி என்னிடமும், ஏ.எஸ் .பெரேராவிடமும் கப்டன் லலித் ஹேவகே தெரிவித்தார். அதன்படி நாம் இருவரும் துப்பாக்கியுடன் மண்வெட்டியையும் கொண்டுசென்றோம். நான் செல்லும்போது கப்டன் ஹேவகே அந்தப் பெண்ணுடன் தனிமையில் நிற்பதைக் கண்டேன். அச்சமயம் அந்தப் பெண்ணின் உடலில் ஆடைகள் எதுவும் இருக்கவில்லை.

பின்னர் அந்தப் பெண்ணின் கணவன் இருக்கும் இடத்துக்குப் பெண்ணை அழைத்துவந்தனர். என்னிடம் இருக்கின்ற மண்வெட்டியை வாங்கிய கப்டன் ஹேவகே இருவரின் தலையிலும் அடித்தார். அவருடன் இருந்த அப்துல் நஸார், ஹமீத், சமரசிங்க ஆகியோர் பொல்லுகளால் அவர்களைத் தாக்கினர். இருவரும் கீழே விழுந்துவிட்டனர். இருவரின் சடலங்களையும் எம்மைப் புதைக்கும்படி கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். நாங்கள் அந்தச் சடலங்களைப் புதைத்தோம். அந்த இடத்தை என்னால் அடையாளம் காட்டமுடியும். அரியாலைப் பகுதியைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அங்குள்ள மக்களுடன் நன்றாகப் பழகியதால் என்னைப் பற்றி மக்கள் நன்றாகச் சொல்வார்கள். எனக்குத் தமிழ் தெரியாததால் எனது சிவில் நிர்வாகப் பணிகளுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் என்பவரைப் பயன்படுத்திவந்தேன். அரியாலைப் பகுதிக்கு நான் கடமைக்கு வர முன்பு அங்கு 50 பேர் காணாமற்போயிருந்தனர் என்று அறிந்தேன். அவர்கள் "சி" முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

கல்லூரி மாணவியான கிருஷாந்தியின் சடலம் என்னிடம் புதைக்கப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டபோது அந்தச் சமயம் அது கிருஷாந்தியின் சடலம் என்று எனக்குத் தெரியாது. வழமையாக உயர் அதிகாரிகள் பொதுமக்களைக் கொலைசெய்துவிட்டு சடலத்தைப் புதைக்கும்படி என்னிடம் தருவார்கள். நான் அவற்றைப் புதைக்க ஏற்பாடுசெய்வேன். கிருஷாந்தி கொலையுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை, சடலத்தைப் புதைத்ததைத்தவிர. இந்தக் கொலை தொடர்பாக உயர் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பும், பின்பும் இதனையே கூறினேன். கிருஷாந்தி கொலை வழக்கில் முறைப்பாட்டுக்காரர்களின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. ஆனால் எதிரிகளின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தி

# கௌரி

போரின் கவிதை

19



எனது பத்து வயது நினைவுகள்..
விபரம் தெரியாத வயதென்றாலும்
ஞாபகங்களைக் கடத்திச் செல்லும்
குழந்தை வயது...சிலதை மறந்தாலும்
காலம் என்மீது பலவற்றை
கட்டாயப்படுத்தி நினைத்து
வரலாற்றைச் சொல்வதற்காக
உயிரோடு வாழவைத்திருக்கிறது.

பள்ளிக்குச் செல்வதென்றால் பயம்
எப்போது கிபிர் வரும்
எப்போது ஷெல் விழும்?
மனம் பதைபதைத்தபடி இருக்கும்.
அந்த 'திக் திக் வாழ்வு' கொடுமை.
பிள்ளைகள் வரும்வரை
வழிபார்க்கும் பெற்றோர்...
உயிரைக்காக்க உணர்வுகள் இழந்து
மகிழ்வுகள் தொலைத்தோம்.

வெள்ளைப் புறாக்கள் நாங்கள்
மனஅமைதி தொலைத்து
வாழ்வுக்கான போராட்டங்களோடு
நத்தைக் குஞ்சுகளாக நகர்ந்தோம்.
அம்மா கத்திக்கொண்டே இருந்தாள்.
எங்கேனும் தப்பிவிடவேண்டும்
ஓடித் தொலைந்து போய்விடவேண்டும்.
வெளிநாட்டில் உழைத்த அப்பாவின் காசு
பதுங்குகுழி வெட்டக் கரைந்தது...
பத்து ரூபா ரவையைப் பதப்படுத்தி
நூறு ரூபாவுக்கு விற்றார்கள்.
பசிக்கும் பாதுகாப்புக்கும் பணம் போதாது
சொத்துக்கள் விற்றும் சோற்றுக்குப் பஞ்சம்!

பயம், பல வணிகர்களுக்கு
பணம் செழிக்கும் கொண்டாட்டமாயிற்று
போர் பலரின் காசுப் பெட்டிகளை
நிறைத்தது ...ஈவு இரக்கம் இன்றி
பல நூறு வீத இலாபத்தில் வருமானம்
முட்டி வியாபாரம் செழித்தது.
படிப்பதற்கு விளக்கெண்ணெய்
தொட்டுக் கொள்ள வெள்ளைச் சீனி
கொட்டிக்கொடுத்தாலும் பணம் போதாது.
எண்ணெய் தீர்ந்தால் எப்படிப் படிப்பது?

பனம்பழத்தில் சீருடை துவைத்தோம்
மின் அழுத்தி பாராத ஆடை
அழகாக இருந்தது.
பயம் மட்டுமே பொதுவானது
எல்லோரையும் நேசித்தோம்..
அன்பு அதிகமாயிருந்தது
படிக்கும் வெறி அனைவரிடமும்...
குப்பிவிளக்கிலும் குறிப்பெடுத்துப் படித்தோம்.
நீலச்சவர்க்காரத்துக்கு நிறைந்த மவுசு
வெளுத்த வாசம் வேர்வையைக் கழுவியது.
தும்புகளாக பறக்கும் நுரைப்பூவை அள்ளி
தம்பிகளுக்குத் தெளித்து விளையாடி..
அந்தக் காலங்கள் முழுமையாக
எம்மிடமிருந்து திருடப்பட்டன..

போரின் வேகம் வாழவிடவில்லை
பணம் உள்ளவன் இடம் மாற்றிக்கொண்டான் ..
வாய்ப்புள்ளவன் உருமாற்றிக்கொண்டான்
வசதியற்றவன் வறுமையில் வாடி
போரில் விழுந்து சாட்சிகளாக மாறி
சகதிகள் பூசி ஒளிந்து மறைந்து
ஒப்பனை உருவங்கள் கலைந்து
முழுமையாகத் தொலைந்துதான் போனான்.

போரின் வேகம் பகை வளர்த்து விரிந்தது
இந்திய இராணுவம் வரும் என்று அழுதனர்
இரக்கமற்றவன் கொல்வான் என்றனர்
'தப்ப என்ன வழி'யெனப் புலம்பினர்.
செலவுவைக்கும் வழி சொல்ல
சில பேர் முளைத்தனர்.

படகில் ஏறி அயல்நாடு போனால்
தப்பித்துவிடலாம் என புதியதோர் வதந்தி
குண்டுகள் விழாத தேசம் வேண்டுமென
கைகளை ஏந்தியவர் படகில் ஏறி
தேசம் மாறத் தயாராக இருந்தனர்.

அம்மா, சொத்தெல்லாம் விற்றாள்..
வெளிநாட்டில் வேலை செய்யும்
அப்பாவைக்கூட பிணை வைத்தாள்.
மீன்பிடிப் படகில் மூன்று குடும்பங்கள்
ஒன்றாக ஏறினோம்....

கடலின் வேகம் பேயெனக் கத்தியது
காற்று தன் கைகளால்
நீரை அடித்து விரட்டியது
கொந்தளிக்கும் கடல் கூடி மாரடிக்கும்
பெண்கள் குரலாக ஒப்பாரி செய்தது.
அலைகள் ஊளையிட்டபடி ஒன்றோடு ஒன்று
போட்டியிட்டுக் குதித்தன..

மீன்பிடி வள்ளம் தள்ளாடித் தவித்தது
அமைதி தேடியோரின் அந்த நொடி
மனங்களெல்லாம் வதைத்தன.
குழந்தைகள் பசியில் கத்தத் தொடங்கின ...
வாந்தியும் குமட்டலும் போட்டிக்குவந்தன
'சத்தம் போடாதே! சகித்துக்கொள்'
'வெள்ளைத் துணி காட்டாதே போர்த்துக்கொள்'
'உன்மீது தோட்டாக்கள் பாயும்!'
படகோட்டி நச்சரித்துக்கொண்டிருந்தான்.

துப்பாக்கிச் சத்தம் தூரத்தில் கேட்டது
வேகப் படகுகள் அதிவேகமெடுக்க
திகில்கொண்ட மனதைத் தேற்றும் மூளை..
பிடித்த படகை கடலில் முக்கி மார் தட்டும்
மமதை பற்றி பெருங்கதை சொன்னான்
பயமில்லாப் படகோட்டி.
பாட்டி சொன்ன கதைதான் என்றாலும்
இப்போது நினைத்தால் அது பெருங்கதையாக
புல்லரிக்கும்.....

வேண்டாத இறைவனில்லை
அம்மா முருகன் படத்தை
மார்போடு அணைத்திருந்தாள்
பாட்டி கந்தன் கவசத்தை
நூறு தடவைக்கு மேல் முணுமுணுத்தாள்.
அசையாத படகை யார் ஓட்டுவது?
அப்படியே நின்றதால் பரபரப்பு
ஓடாத படகு தத்தளித்து ...இயந்திரத்தின் அமைதி
பயத்தை நீட்டியது..என்னவாயிற்று?
படகின் அடியில் மீன் வலை சிக்கியதாம்
படகோட்டி விரக்தியில் கத்துகிறான்.

தேவையற்றதை வெளியில் போடுங்கள்
பாரம் கூடி படகு ஆடுகிறது...
உடைமைகள் எல்லாம் எறியப்பட்டன..
பாட்டியை என் கைகள் பற்றிக்கொண்டன...
பாவம்! அவளை யாரும் எறிந்துவிட்டால்....?

முக்குளிப்பவர்கள் நீரில் மூழ்கினர்
மீன் வலை அறுக்க பெரும்பாடுபட்டனர் ...
சிக்கிய வலை விடுபட மறுத்தது.
அம்மா நேர்த்திகள் வைத்து

பிரார்த்திக்கத் தொடங்கினாள்....
பிள்ளைகள் எல்லாம் தூங்கிவழிந்தன
என் கண்கள் அனைத்தையும் பதிந்தன.
பயம் நெஞ்சை நெரித்தது ....
அப்பாவை விட்டு நாங்கள்
இறந்து போய்விடுவோமோ?

மீன் வலையை அறுத்து
சாகசம் செய்தவன் நீரைக் குடித்து
எம்மைக் காப்பாற்றி மயங்கிச் சரிந்தான்.
படகு மெதுவாக இயங்கத் தொடங்கியது...
எங்கேனும் தங்கித்தான் புறப்படவேண்டும்
படகு பயணிக்காது என்றான் படகோட்டி.

நீண்ட போராட்டம் தீவொன்றை அடைந்தோம்
உயிர் பிழைத்தோம் உடைமைகள் இல்லை
தேவாலயங்கள் உதவின
சோறும் பாணும் அள்ளித் தந்தார்கள் ....
பயணம் தொடரக் காத்திருந்தோம்.
கூட வந்தவர் பலர் விலகினர்
கடற்பயணம் வேண்டாமென்றனர்
அம்மா பிடிவாதமாக நின்றாள்..

பயணம் மீண்டும் தொடங்கியது
அலைமோதும் அசுரக் கடல்
விதி இழுத்துக்கொண்டு வேகமாக
எங்கோ கொண்டு ஓடியது....
படகின் சப்தம் பைத்தியமாக்கியது
உப்பு நீரோடு சிறுநீரும் சேர்ந்தது..
தப்பித்தால் மட்டும் போதுமென்றனர்.

இரவு முழுவதும் பயணித்தோம்
அப்போதைய ஞாபகங்கள் அழியவில்லை
இப்போது நினைத்தால் நெஞ்சு கொதிக்கும்.
பிஞ்சுகள் இவற்றை எப்படிக் கடந்தோம்?
அழகிய காலங்கள் அழிந்துபோயின...
காசு தொலைந்தது.. வறுமை நீடித்தது
கல்வி தொலைந்தது...அலைச்சல்
ஆரோக்கியத்தை விழுங்கியது.
வாழ்வின்மீது வெறுப்பு..
வறுமையால் கல்வி புறக்கணிப்பு
கடல் தாண்டிய பயணம்
எல்லாம் மாற்றியது.

பள்ளித் தோழிகள் பக்கத்து வீடு...
பாசமிக்க ஆசிரியர்கள்
கோழிக்குஞ்சுகள்
கூடி விளையாடும் நாய்க்குட்டி
வண்ணத் தோட்டம் பழம் தரும் மாமரம்
கோயில் மணி ஓசை
நாலு மணிக்கு கூடி விளையாட்டு
எல்லாம் போயிற்று ...மீண்டும் வருவேனோ?
என் மண்மீது விழுந்து அழுவேனோ?

கரை தெரிந்தது ...உயிர் விழித்துக்கொண்டது
தப்பிவிட்டோம் என்னும் திருப்தி
வாழ்ந்துவிடலாம் என்னும் நம்பிக்கை
ஒன்றுமில்லாமல் புதிய வாழ்வு
வெளிநாட்டுப் பணம் காப்பாற்றும் என்னும்
உயரிய நம்பிக்கை..
அகதிமுகாம் தஞ்சம் கொடுத்தது
அங்கிருந்தவரைப் பார்த்து
ஒரு முதியவர் சொன்னார்
'ஒரு சிறையிலிருந்து இன்னோர் சிறைக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீ விதைத்த வினை...!

விடத்தல் தீவு
மைக்கல்

நந்தனுக்கு வயது பதினாறுதான் தொட்டிருக்கும். இப்பவே அவன் தன்னை முழு இளைஞனாகக் காண்பிக்கத் தொடங்கி அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஆயிரம் பிரச்சினைகளை இழுக்கத் தொடங்கி விட்டான். பாடசாலையில் ஆரம் பித்த சின்னச்சின்ன சண்டைகள் இப்போது இவன்தான் இந்தக் கிராமத்திலேயே பெரிய "ரவுடி" என்கிற அளவுக்குக் கொண்டுவந்து விட்டுவிட்டது. இரவுமுழுக்கத் தன் தகாத நண்பர்களோடு குடியும் கும்மாளமுமாக இருந்ததால், அதிகாலை பத்துமணியாகியும் அவனால் எழும்பமுடியவில்லை. முகத்திலும் கழுத்திலும் ஆங் காங்கே சிறு காயங்களும், நகக் கீறல்களும், முழங்காலில் தேய்ந்து விழுந்த அடையாளமும். மகனை எழுப்ப வந்த தாய் அவனைக் கண்டதும் மார்பிலடித்து அலற ஆரம்பித்தாள்.

"ஏண்டா நந்தா இந்தமாதிரிப் பண்ணுறாய்.... உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புத்தி வராதா? இதுக்குத் தான் படியடா படியடா என்று கத்திக்கத்திச் சொன்னன் கேட்டியாடா... இப்போ கண்டவன் நிண்டவனிட்டையெல்லாம் அடிவாங்கிட்டு வந்து சுரணை இல்லாம படுத்திருக்கிறியேடா. நான் இந்த நாலு குமரு களையும் வைசிட்டு படுறபாடு... அதுசரி அப்பனுக்குப் புள்ளை தப்பாம பிறக்குமோ.... அவன் விதைச்சது இப்போ முள்முருக்கைமாதிரி வளர்ந்து சும்மா வீட்டையும் கெடுத்து நாட்டையும் கெடுக்குது...."

"அம்மா சும்மா போம்மா.. காலங்காத்தாலே வந்து எண்ட உயிர வாங்காத. நானே நொந்துபோயிருக்கிறன். சும்மா எந்த நேரமும் தொண தொணவென்று பேசிக் கொண்டு...." அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, வழமைபோல நண்பர்களிடம் இருந்து அவனுக்குத் தொலைபேசி அழைப்புகள் வரத்தொடங்கின.

'இதுக்குள்ள இது வேற.... இவங்கட தொல்லை பெரிசாப் போட்டுது...... சொல்லடா ஏண்டா எடுத்தனீ?' என்று அவன் மறுமுனையில் இருந்து நண்பனிடம் பேச்சுக்குடுத்தான்.

"அடேய் நீயும் ஒரு மனுசனா போயும் போயும் அந்த நாயிட்டை அடிவாங்கிட்டு வந்திருக்கிறாய்? இனிமே என் நண்பன் எண்டு யாரிட்டையும் சொல்லாதடா. ச்சே.. அவனுக்கு முன்னுக்கே அவன்ர தங்கச்சியைத் தூக்காமல் வந்திட்டியே" மறுமுனை நண்பன் இவனைத்திட்டித் தீர்த்தான்.

"அடேய் விடுடா அவள் எங்க போயிருவா? என்னைவிட் டிட்டு யாரையாவது லவ் பண்றா எண்டு கேள்விப்பட்டேன் அண்டைக்கு அவளுக்கும் அவள் குடும்பத்துக்கும் சங்கறுக்காமல் விடமாட்டேன்... இப்பவே அம்மா தொண தொண என்று கத்திட்டுக் கிடக்கிறா, இதுலை அவளை வேற இஞ்ச கூட்டிவந்து என்ன பண்றது? என்ர அக்காப்பேய்கள் வேற வீட்டிலேயே கல்யாணம் கட்டாமக் கிடக்குதுகள், இதிலை அவளையும் நான் வீட்டை கொண்ணந்தா அவ்வளவுதான்."

மறுமுனையிலிருந்து "போடா நீயும் ஒரு ஆளா...... உனக்குப் பேர் ஒரு ரவுடி தாதா.... எல்லாம் வாய்ச் சவாடு தான். உள்ள ஒண்டும் கிடையாது..... சரி நீ எக்கேடு கெட்டாவதுபோ.... நேற்று எத்தனை துண்டு போச்சுது. ஒரு ஐம்பது ஒரு எழுபத்தைஞ்சு...? எவ்வளவுக்குடா வித்தாய்? " என்று நண்பன் விசாரித்தான்.

"இதெல்லாம் போனல பேசமுடியாதடா தெருச்சந்திக்கு வா... அங்க பேசுவம்...." என்றான் நந்தன்.

நந்தன் பழைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு நண்பன் ரமேசையும் போய் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். அப்பொழுது இருமருங்கிலும் நின்ற போக்கு வரத்துப் பொலிஸார், மங்கிய இருட்டில் டப்பென மோட்டார் சைக்கிளை வழிமறித்தனர். மோட்டார் சைக்கிளுக்குச் சிக்னலும் இல்லை, இவர்களின் தலையில் ஹெல்மெட்டும் இல்லை. பொலிஸைக் கண்டதும் செய்வதறியாது பைக்கை அந்தப்படியே போட்டுவிட்டு இருவருமாக தலைதெறிக்க ஓடினர். ஆனால் அவர்களைத் துரத்திப்பிடித்து தலையில் அடித்து இரத்தக் காயங்களுடன் இழுத்துக்கொண்டு வந்தனர் பொலிஸார். அப்பொழுது பொலிஸ் நிலைய அதிகாரி... "இவன்டை பொக்கற்றை செக் பண்ணு "என்று சொல்லி கன்னத்தைப் பொத்தி அறைந்தான்.

நந்தனுக்கு அந்த அடி மின்னி முழங்கியதுபோல் இருந் தது. ரமேசுக்கும் அடிபோட்டார்கள். "என்னடா... இது.. இது யார்ரா தந்தது... இது எங்கடா வாங்கினிங்க... இதுதான் உங்க தொழிலா... நீங்கதான் இந்த ஸ்கூல் பெடியளுக்கு ட்றக்ஸ் குடுக்கிற ஆக்களா? அந்தப் பையிலை என்னடா வச்சிருக்கிற காட்டடா?" என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு, அடிக்கத் தொடங்கினார்கள்.

**சஞ்சீவி சிறுகதை**

"ஐயோ... அடிக்காதீங்க சேர்.... நாங்க உண்மையச் சொல்றம்... நாங்க... இந்த வியாபாரம் செய்யேல. கொழும்பிலை இருந்து வர்ற அண்ணாதான் இதைக் கொண்டுபோய்க் குடுத்தா ஒரு நாளைக்குப் பத்தாயிரம் தருவதாகச் சொன்னார். அதனால தான் சேர் நாங்க இந்தக் காரியத்தை செய்திட்டோம்."

ஆனால் அதையெல்லாம் பொலிஸார் கண்டுகொள்ள வில்லை.

நந்தனும் ரமேசும் சிறைவைக்கப்பட்டார்கள். நந்தனின் தாயும் ரமேசின் தாயும் அங்குமிங்குமாய் அலைந்து ஒரு லோயரிடம் பேசிப் பார்த்தும் ஒன்றும் முடியாமல் ஐந்து வருடம் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அதன் பிறகு சொல்லவாவேண்டும்? உலகத்திலேயே சித்திரவதைக்குப் பேர்போன இடம் ஸ்ரீலங்காதானே. சிறைக்குள் இருந்த கைதிகளால் அடிக்கடி தாக்கப்பட்டு உணவைப் பிடுங்கிக்கொட்டி அவர்களை நிர்வாணப்படுத்தி இம்சித்துக் காறித்துப்பி கைதிகளுக்கு கைதிகள் ஆள்மாறி ஆள்மாறி தங்கள் கைவேலைக்கு அமர்த்தினர். அந்தக் கைதிகளுக்குள்ளே மிகவும் கொடூரமான ஒரு தாதாக் கைதி தலைமையில் இருந்தான். அவன் பெயர் மூர்த்தி. ஒவ் வோர் நாள் காலையிலும் ஒரு பீடி அல்லது இரண்டு பீடி அவனுக்கு எல்லாக் கைதிகளும் கொடுக்கவேண்டும். இந்த சின்னத்தம்பிமாருக்கு சொறி முத்திப் பழுத்துகளுக்கும் அப்பிடி பீடித்துண்டு குடுக்கும் சந்தர்ப்பம் வந்தது. அந்த நேரத்தில் அந்தத் தாடி வளர்த்த முகம் முழுவதும் அடிக ளாய் பட்டு தழும்போடு பார்த்தாலே கிலி கொள்ளவைக்கும் எமன் போன்ற உருவத்தைக் கண்டபோதே நந்தன் கொஞ்சம் ஆடிப்போனான்.

"டேய்... நீ யாரடா... என்ன செஞ்சிட்டு உள்ளை வந் தாய்....."

மூர்த்தியின் கேள்வி இன்னும் நந்தனை நடுங்கவைத்தது.

"அண்ணோய்.... நாங்க கொலை கிலை எதுவும் செய் யலை.... கொஞ்சக் கஞ்சா விக்கப்போன இடத்திலை பிடிபட்டிட்டம் " என்று சொன்னதுமே அவன் 'பளார் 'என்று அறைவிட்டான். "அம்மா" "அம்மா" இருவரும் அலறித் துடித்தார்கள்.

"அண்ணா எங்கள விட்டிருங்கண்ணா.... நாங்க தெரியா மச் செய்திட்டம். உங்க பீடி இந்தா இருக்குதண்ணா. [illegible] அந்தச் சிறைச்சாலையே மிரண்டுபோயிருந்த பெரிய ரவுடியான மூர்த்தி அவனை விடுவதாக இல்லை.

"அடேய்..... நாயே நீ எந்த ஊரடா..... உன்ர அம்மா அப்பா பேரென்னடா" என்று மறுபடியும் அறைந்தான்.

" அப்பா பெயர் சத்தியமூர்த்தி. அம்மா பேர் வதனா" என்று நந்தன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

ஒருகணம் மூர்த்தி விக்கித்துப்போய் நின்றான். பின்னர் அவனை இழுத்து அணைத்துக்கொண்டான்.

" நந்தா, நான்தான் உன்ர அப்பா மூர்த்தி" என்று அழத் தொடங்கினான்.

எல்லாச் சிறைக்கைதிகளும் இவர்களையே ஒரு கலவரத்தோடு பார்த்துக்கொண்டு திகைத்துப்போய் நின்றார்கள்.

"நீங்களா.....என் அப்பா.... நீங்களா.... என் அப்பா..." விம்மி விம்மி நந்தனும் அழ ஆரம்பித் தான். பக்கத்தில இருந்த கைதி ஒருவன் இருவ ரையும் பார்த்து "பாத்தீங்களாடா அப்பன் என்ன விதைச்சானோ இப்போ பிள்ளை அதைவிடக் கேவலமா வந்து அப்பனுக்கே பீடி குடுக்கும் நிலை. எப்படி இருந்த யாழ்ப்பாணம் இண்டைக்கு இப்பிடியாயிருச்சே..." என் றான்.

மற்றக்கைதி அவனைப் பார்த்து.... "சும்மா வாயை மூடண்ணை.... மூர்த்தி காதிலை விழப்போகுது நீயும் என்ன சும்மாவா உள்ள வந்தனி உன் கள்ளப்பொண்டாட் டிக்காக.. உன் சொந்தப் பொஞ்சாதியையே கொன்று தூக்கிலிட்டுத்தானே வந்திருக்கிற..." என்று சொன்னதும் அங்கே.... ஒரு பெரிய நிசப்தம். சிறையதிகாரி உள்ளே வந்தார். அந்த அதிகாரி வந்தாலே யாருக்கோ அன்று தர்ம அடி விழப்போகின்றது என்றுதான் அர்த்தம்.

"யாரடா நந்தன்...?'

நந்தன் பயத்தோட மெதுவாக கையை உயர்த்தினான். சிறையதிகாரி அவனை கொலைவெறியோடு நெருங்கி னார். அந்தச் சமயத்தில் யாரும் எதிர்பார்க்காத காரியத் தைச் செய்தான் மூர்த்தி.

அதுவரை சிறையின் தாதாவாக இருந்தவன், சட்டென சிறையதிகாரியின் காலில் விழுந்து அழத்தொடங்கினான்.

" சேர், இவன் என்ர மகன்... இவனுக்கு ஒண்ணும் செய்யாதீங்க.... நான்தான் பாவம் செய்திட்டன்..... இவன் வயித்திலை இருக்கும்போதே.... இதே போதைவஸ்துப் பிரச்சினைக்காக ஒருவனைக் குத்திக்கொன்றுவிட்டு ஜெயிலுக்கு வந்துவிட்டேன். இப்போ... என் பிள்ளை இந்த வயதிலேயே சிறைக்கு வருவான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.... நான் விதைத்த வினையே எனக்கு வினையாக மாறிவிட்டது. ஐயோ என் மகனை ஒன்றும் செய்யாதீங்க...." என்று கதறினான். சிறை அதிகாரியோ சிரித்தபடியே "அப்படியானால் இவனை அடிப்பதில் தவறே இல்லை. எத்தனை பிள்ளைகளை நீ போதைப்பொருள் கொடுத்து அழித்திருப்பாய். உன் மகன் உன் கண்முன் னால் அடிவாங்கினால்தான் உன்னைப் போன்றவர் களுக்கு புத்தி வரும்" என்று சொல்லிக்கொண்டே அடிக்கத் தொடங்கினார். மூர்த்தி அழுதுகொண்டேயிருந்தான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளார்ந்த சொற்களின் வழி கசிந்துருகும் இசைவெளி: தென்கருணையூர் வெற்றிக்காட்டுப் பிள்ளையார் இசைப்பாமாலை

கலாநிதி தி. செல்வமனோகரன்
*சைவசித்தாந்தத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



சொற்பதம் கடந்த பொருளான இறைவன் ஆன்மாக்களுக்கு நல்லருள் தர, சுட்டும் பொருளாக உருவத்திருமேனி கொண்டுவருவார் என்பது இறைநம்பிக்கையாளர்களின் கருத்தாகும். அத்தகைய உருவத்திருமேனியைக் கண்டு களித்து நின்று புகழ்ந்தேத்தித் துதிக்கும் அடியவர்கள் அதுவே பேரின்பம் ஏன்பர். சிவதாண்டவமான நடராஜவடிவத்தைக்கண்ட காரைக்கால் அம்மையார் கேட்கும் பெருவரமே 'அறவா நீ ஆடும்போது உன்னடியின்கீழ் இருக்க வேண்டும்' என்பதாகும். நாவுக்கரசரும் அந்த அழகை கண்ணாரக்கண்டு கூத்துமாடி நின்றதோடு இந்த ஆனந்தத் தாண்டவத்தைக் காணும்போது கிடைக்கும் எனின் 'மனித்தப் பிறவியும்' வேண்டுமென்றார். இத்தகைய மனநிலையை 'தென்கருணையூர் வெற்றிக்காட்டுப் பிள்ளையார் இசைப் பாமாலை' எமக்கு ஏற்படுத்துகின்றது.

இந்த இறுவெட்டு வெற்றிக்காட்டுப் பிள்ளையார் ஆலய நிர்வாகசபையால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நெற்றிக்குட்டில் மெட்டு..., தென் கருணையம்பதி, கருணை ஒளியே கணபதியே, தேரோட்டம் தேரோட்டம் எனும் நான்கு பாடல்கள் தமிழாசிரியர், புனைகதையாளர், கவிஞர் எனப் பன்முகம்கொண்ட இ.க.முரளிதரனால் எழுதப்பட்டுள்ளன. இவற்றை முறையே ரி.எல். மகாராஜன் ( இந்தியா), அனுராதா ஶ்ரீராம் (இந்தியா), ஜெயபாரதி கௌசின் (இலங்கை) , கோகுலன் சாந்தன் (இலங்கை) ஆகியோர் பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் "வெற்றி தரும் பாவமுதம்.., ஐங்கரத்தால் உலகை.., அரிமுக கணபதி.." எனும் மூன்று பாடல்களை கவிஞரும் பாடகருமான வெற்றிசிந்துஜன் எழுதியுள்ளார். இந்தப்பாடல்களை முறையே உத்தரா உன்னிகிருஷ்ணன் (இந்தியா), வெற்றி சிந்துஜன்(இலங்கை), உன்னிமேனன் (இந்தியா) ஆகியோர் பாடி உள்ளனர். இந்தப் பாடல்கள் யாவற்றுக்கும் சிறப்பாக இசையமைத்து நாதத்தின் தலைவனது பெருமையைக் காற்று வெளியிடை நாதமாக்கிய பெருமைக்குரியவர் இலங்கையைச் சேர்ந்த பாடகர், இசையமைப்பாளர் வெற்றி சிந்துஜன் ஆவார்.

இன்று ஈழத்தமிழ் புலத்தில் கோயில்கள் ஆகமமயப்படுத்தலும் கட்டடக்காடுகளாக மாறுவதும் ஆன்மீகத்துக்கப்பாலான கவர்ச்சியின் வசப்பட்ட அகப்புற அம்சங்களை முதன்மைப்படுத்துவதுமான சூழலில் இவ்வாறான பக்திப்பாமாலைகளும் உள்ளூர்க் கலைஞர்களுக்கு முதன்மை கொடுப்பதும் இந்தியக் கலைஞர்களோடு சமதையாக இடமளிப்பதும் பாராட்டத்தக்கது. இந்த ஆலயத்தின் நிர்வாகசபை இக்கைங்கரியத்தைச் செய்ததன் வழி தன்னை மதிப்பேற்றம் செய்து கொள்கின்றது. இ.சு. முரளிதரனின் கவிதைகளும் ஏனைய எழுத்துகளும் அறிவியல்மயப்பட்டவை. இந்தப் பாடல்களோ ஆன்மிகவயப்பட்டவை. உணர்வின் பிழிவாகத் தம்மை அவை கட்டமைக்கின்றன.

*"ஏக தந்தாய வக்ர துண்டாய*
*திரி நேத்ராய கணபதியே நமஹ*
*லம்போ தராய மகா வித்யாய*
*சாமர கர்ண கணபதியே நமஹ" (நெற்றிக்குட்டி...)*

எனத்தானே ஒரு மந்திரத்தை எழுதி, அதை இறையர்ப்பணம் செய்கின்றார். அதே பாடலில் விநாயகரின் தோற்றத்தை "தொன்ம நூதனமாய் ஜென்ம சாஸ்வதமாய் சர்வ மேதினியை ஆளும் சிற்பரனே" எனப் புது வர்ணனை செய்து அவரது கையில் உள்ள ஆயுதங்களைப் பட்டியல் போட்டுவிட்டு 'சீத கோகனமே' எனச் சொல்வது சிறப்பாக இருக்கிறது. மேதினியையும் கோகனனையும் இணைத்துப் படைப்பாக்கம் செய்கிறார். கன்மத்தை வற்றச்செய்யும் இறைவனின் புகழை 'காலமீ நயமே' எனப் புதுச்சொல்லால் எடுத்துரைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல தென்கருணையூர் வெற்றிக்காட்டின் நில புலத்தை "தென்னங்கீற்றில் ராகவர்ணம் நெல்லின் நாற்றில் தோப்புக்கரணம்" என்னும் "நெற்றிக்குட்டில் மெட்டுப் போட்டு உப்புக்காற்றும் உன்னைப் பாடும்" என்றும் வயலும் உப்பு வெளியுமான கிராமத்தின் அழகைக் கண்முன் நிறுத்துகிறார். இவை யாவற்றுக்கும் மேலாக ஈழத் தமிழரின் நீண்ட வலி சுமந்த வாழ்வை வேழ முகத்தவனை விளித்து

*"புதிர் கலந்த பெருவெளியில் அன்று துடித்தோமைய்யா*
*கதிர்கருகி தினம் குறுகிக் கண்ணீர் வடித்தோமையா*
*நிலமிழந்து துயர் சுமந்து மண்ணில் தவித்தோமையா*
*மனமுருகி கணபதியே கைகள் குவித்தோமையா"*

எனும் ரணங்களாலான சொற்களால் உரைக்கிறார். நம்பியோர் உயிர்சிலிர்க்க பரவசத்தைத் தந்து இறைவனை தாயுமானவன் என்கிறார். இவருடைய மொழிச்சிறப்புக்கும் சந்தமிக்க மரபின் வழிநிற்கும் இவரது கவியாக்கத் திறத்துக்கும் ஒரு பதச்சோறாய்

*"ஏரம்பன் சுழி போட்டு ஆரம்பப் பணியாற்ற*
*பேரின்ப வழிகாட்டுவாய்*
*வேதத்தின் உருவாகி ஞானத்தின் பொழுதாகி*
*நாதத்தில் ஒளியேற்றுவாய்*
*காட்டுக்குள் விதையாகி விதைக்குள்ளே காடாகி*
*மாயஞ் செய் மகிழ் ரூபனே*
*பாட்டுக்குள் கருவாகி பாவலருக்குத் துணையான*
*கருணையூர் கணநாதனே"*

எனும் வரிகளைக் குறிப்பிடலாம்.

இதேபோல வெற்றி துஷ்யந்தனும் தனக்கான மொழிக் கிடங்கில் இருந்து ஓசை நிறை வரிகளை இசைப்பயனாக எமக்களிக்கிறார். இறைவனை நாடவிரும்பும் அடியவனை

*"வெற்றிக்காடு சுற்றி ஓடு கால்குத்தி குத்திஆடு அவன்*
*நெற்றிதேடு கீதம்பாடு நாள்கள் தோறும் காலடி தேடு"*

எனப் புகழ்ந்தேத்தும் வரிகளின் வழி வழிப்படுத்துகின்றார். இது அவர் மனதுக்கானதாகவும் அமைந்துவிடுகிறது. சில பொருத்தமான இடங்களில் பேச்சு வழக்குச் சொற்களையும் (கேக்கும்) கையாள்கிறார். அவரது மூன்று பாடல்களும் மனதுக்கு இதம் தருகின்றன. காரணப்பொருளான இறைவனின் பத்து நாள் திருவிழாவால் தரும் இன்பங்களைத் தன்னனுபவ வெண்கூட்டின்வழி வரிகளாக்குகின்றார் துஷ்யந்தன்.

தேரோட்டம் எனும் பாடலில் இ.சு முரளிதரன் ஆட்டம் என்ற சொல்லை சொற்பின்வருநிலையணியாகப் பயன்படுத்தி பாடலுக்கு உயிர்த்துவம் அளிக்கிறார். இறைவனை 'பனிக்குள் இருக்கும் நெருப்பு' எனவும் வேறு பலவாறும் முரணணி வழி இயற்கைக்கதீதனாக வெளிப்படுத்துகிறார். இரு கவிஞர்களுமே எதுகை, மோனை, உயர்வுநவிற்சி முதலான பல அணிகளைக் கையாண்டு ஓசை நிறை பாடல்களை ஆக்கியளித்துள்ளனர்.

இரு கவிஞர்களும் தந்த எளிமையும் கனதியும் வாய்ந்த வரிகளை 'கௌரிமனோகரி, பத்து வராளி ஆபேரி, சங்கராபரணம், மாண்டு முதலான இராகங்களின் வழி கேட்போர் பிணிக்க சொல்ரூபத்தைக் காட்சிரூபமாக மனதினில் இனிக்கத் தருகிறார் வெற்றி சிந்துஜன். எவ்வேளையும் கேட்கத்தக்க வகையில் செவிநுகர் கனிகளாய் ஆக்கியளித்துள்ளார். அவரின் இசைத்திறனை - தேவையை அது தரும் சுகானுபவத்தை தம் 'த்வனியால்' பிரபஞ்சம் எங்கும் பரவச் செய்த இசையாளர்கள் யாவரும் தத்தம் பணிகளைச் செப்பமாகச் செய்திருக்கிறார்கள். வரிகளை சிறப்புற உணர்ந்து பாடியிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"பனிக்குள் நெருப்பாயும் பகைக்குள் நட்பாயும் விதிக்கு விலக்காயும் விஷத்துக்கு அமிர்தமாயும் இருக்கின்ற (இ.சு முரளிதரனின் வரிகள் இவை) நாத பிரமத்தை கசிந்துருகி ஆனந்தித்து இன்புறும் இறுவெட்டாக வெற்றிக்காட்டுப் பிள்ளையார் இசைமாலை திகழ்கிறது.

---

## புதிய உள்ளூராட்சிசபைகள்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

லும் அதைமீறிக் குப்பை கொட்டப்படுகிறது. மேலும் கமரா பொருத்துவதற்கும் காசுவேண்டுமே?

இவ்வாறான குப்பை கொட்டும் ஒரு சுகாதாரச்சூழலில் அல்லது தன்னுடைய குப்பையை மற்றவர்களுடைய முற்றத்தில் கொட்டும் ஒரு சீரழிந்த கலாசாரச் சூழலில், புதிய உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதேசசபைகள் சந்தைச் சுகாதாரத்தையும் சந்தையில் விற்கப்படும் உணவுகளின் நுகர்வுத் தரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு புதிய வினைத்திறன்மிக்க திட்டங்களை வகுக்கவேண்டும். சந்தைகளைச் சுத்தமாக வைத்திருப்பதில் இருந்துதான் ஒரு உள்ளூராட்சிசபையின் வெற்றிகள் அனைத்தும் தொடங்குகின்றன. சந்தைகளைச் சுத்தமாகப்பேணும் ஓர் உள்ளூராட்சிசபை தன் எல்லைக்குட்பட்ட கிராமங்களையும் சுத்தமாகப்பேணும். எனவே சந்தைச் சுகாதாரம் எனப்படுவது ஒரு குறிகாட்டி. புதிய உள்ளூராட்சிசபைகள் இதைக் கவனத்திற் கொள்ளுமா? உள்ளூராட்சிசபைகள் உருவாக்கப்பட்ட உடனடுத்த நாள்களிலேயே குப்பைகளைப் பிரித்தெடுத்து எரிக்கும் இடங்களில் முரண்பாடுகள் எழுந்தன. இணுவில், கல்லுண்டாய் வெளி ஆகிய இடங்களில் குப்பைகள் எரிக்கப்படுவதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து முறைப்பாடுகள் எழுந்தன. குப்பைகளை எரிப்பதற்குப் பதிலாக அவற்றை மீள்சுழற்சி செய்வது தொடர்பில் புதிய நவீன சிந்தனைகள் தேவை. உதாரணமாக ஸ்வீடன் நாடானது குப்பைகளை மீள்சுழற்சி செய்வதில் வெற்றியடைந்த நாடாகப் பார்க்கப்படுகிறது. அங்கே ஒரு கட்டத்தில் மீள்சுழற்சி செய்வதற்கு உள்ளூர்க் குப்பைகள் போதிய அளவு இருக்கவில்லை. அதனால் மீள்சுழற்சி மையங்கள் தொடர்ந்தும் இயங்குவதற்காக குப்பைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. எனவே உள்ளூராட்சிசபைகள் இந்த விடயத்தில் நவீனமான, வினைத்திறன்மிக்க முடிவுகளை எடுக்க வேண்டும். இது தொடர்பாக நான் உரையாடிய பொழுது ஒரு பொறுப்புவாய்ந்த அதிகாரி என்னிடம் கேட்டார். "அரசியலில் குப்பைகொட்டும் இந்தக் கட்சிகளிடம் பிரதேசசபைகளில் குப்பைகளை அகற்றுங்கள் என்று கேட்பது பொருத்தமானதா" என்று? பிரதேசசபைகளைக் கைப்பற்றுவதற்கான போட்டிகள் அவ்வாறான ஒரு தோற்றத்தை உருவாக்கியிருக்கலாம் என்பதனை புதிய பிரதேசசபை உறுப்பினர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த அபிப்பிராயத்தை மாற்றியமைக்கும் விதத்தில் உள்ளூராட்சிப் பிரதேசங்களை சுத்தமானவைகளாகவும் சுகாதாரமானவைகளாகவும் பசுமைப் பூங்காக்களாகவும் மாற்ற முன்வரவேண்டும். அன்னை தெரேசா கூறுவார்... "தொண்டு செய்வது என்பது வீட்டிலிருந்து தொடங்குகின்றது" என்று. அப்படித்தான் சுத்தமும் சுகாதாரமும் உள்ளூராட்சிசபைகளிலிருந்து தொடங்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் முட்டையிடும் வாத்து!




ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். அவன் ஒரு பேராசை பிடித்தவன். அவன் நிறைய வாத்துகள் வளர்த்துவந்தான்.
அந்த வாத்துகளில் ஒன்று ஒவ்வொரு நாளும் ஒரு தங்க முட்டை இட்டு வந்தது. அந்த விவசாயி அந்தத் தங்க முட்டைகளை விற்றுப் பணக்காரன் ஆனான்.
வாத்து ஒவ்வொருநாளும் ஒரு தங்க முட்டை தானே இடுகிறது. இதற்காக ஒவ்வொரு நாளாகக் காத்திருக்கவேண்டுமா?
வாத்தின் வயிற்றுக்குள்தான் நிறையத் தங்க முட்டைகள் இருக்கும் என யோசிக்கத் தொடங்கினான்.
எல்லாவற்றையும் ஒன்றாக எடுத்து விற்றால், ஒரேநாளில் மிகப்பெரிய பணக்காரன் ஆகலாம் என நினைத்தான்.
அடுத்தநாள், விவசாயி எல்லாத் தங்க முட்டைகளையும் ஒன்றாக எடுப்பதற்காக, ஒரு கத்தியை எடுத்தான்.
வாத்தின் வயிற்றைக் கீறினான். வாத்து துடிதுடித்து இறந்தது. அதன் வயிற்றினுள் அன்றையதினம் போடவேண்டிய ஒரே ஒரு தங்க முட்டை மட்டும் இருந்தது.
வாத்து இறந்ததினால் ஒவ்வொருநாளும் கிடைத்துவந்த தங்க முட்டையும் அவனுக்குக் கிடைக்காமல் போய்விட்டது.
விவசாயி தான்செய்த முட்டாள்த்தனமான செயலை எண்ணி கவலைப்பட்டு வருந்தி "பேராசை பெரும் நஷ்டம் கொடுக்கும்" என உணர்ந்தான்.


**பேராசை பெரும் நஷ்டம்**

## ஜூலை 06


ஐக்கிய நாடுகள் சபையால் ஜூலை 6 ஆம் திகதி உலக கிராமப்புற வளர்ச்சி தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது




## இணைப்போம்







**ச.தேஜஸ்ரீ**
தரம் - 8D
யா/சாவகச்சேரி
இந்துக்கல்லூரி



**யோ.ஷாய்சரன்**
தரம் - 9C
யா/கொக்குவில்
இந்துக்கல்லூரி



**அ.அல்வின்**
தரம் - 5C
யா/சென். பெனடிக்
ஆர்.சி. வித்தி.



**வி. டெவின்**
தரம் - 06
கிளி / கிளிநொச்சி
மத்திய கல்லூரி.



**து.ஹரீஷ்**
தரம் - 05
யா/ கொக்குவில்
இந்து ஆரம்பப்
பாடசாலை



**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கதினம்

O இராகவன்

பாகம் 3

குலசிங்கத்திடம் நான் எந்தப் புத்தகத்தையும் பெயர் குறிப்பிட்டுக் கேட்டது கிடையாது. அவராகவே எனக்குப் புத்தகங்களை எடுத்துத் தருவார். அந்தவகையில் அவர் எனக்குத் தந்த புத்தகங்களில் முக்கியமானது, 'தாவோ தேஜிங்' என்ற புத்தகம். இதுவுங் 'க்ரியா' வெளியீடுதான். "லாவோட்சு" என்ற சீன ஜென் தத்துவவாதியின் கவிதைகளடங்கிய தொகுப்பு. அந்தக்கவிதைகளை சி. மணி மொழிபெயர்த்திருந்தார். கெட்டியான அட்டையில் கறுப்பு வெள்ளை வண்ணத்தில் ஒரு பக்கத்தில் கவிதையும் எதிர்ப்பக்கத்தில் மரங்களின் புகைப் படங்களும் அடங்கிய புதையல் என்றே அதைச் சொல்லலாம்.

அப்ப தினகரன் பேப்பருக்கு எடிட்டராயிருந்த ராஜஸ்ரீகாந்தன்ர கூடப்பிறந்த தம்பி ராஜஸ்ரீதரன் மந்திகையில கடை வைச்சிருந்தவர். முந்தி மந்திகையில இலங்கை வங்கியிருந்த இடத்துக்கு நேரெதிரிலதான் அவரின்ரை கடையிருந்தது. எலக்ரோனிக் சாமான்கள் விக்கிற கடை அது. அதோட பகிடியென்னெண்டால் டொமினிக் ஜீவாவின்ர மல்லிகை ஒழுங்கா வாற கடையும் அதுதான். எனக்கு இந்தச் சங்கதி முதல் தெரியாது. நான் ஊர்ப்புதினத்தின் அதிதீவிர வாசகர் என அடிக்கடி குறிப்பிடுகிற பாலா மாஸ்ரர்தான் ஒருக்கா அவரோட கதைச்சுக்கொண்டு நிக்கேக்குள்ளை மல்லிகையைப் பற்றிக் கதை வந்தாப்போல மந்திகையில இலங்கை வங்கிக்கு முன்னாலையிருக்கிற "ஸ்ரீராம் ஸ்ரோருக்கு" மல்லிகை ஒழுங்கா வருகுது எண்டொரு தகவலைச் சொன்னார். அதுக்குப் பிறகு நான் அந்தக்கடையைத் தேடிப்பிடிச்சன். நான் அங்கை போய் மல்லிகையை விசாரிச்சன். 'அஞ்சே அஞ்சு கொப்பிதான் வாறது. வந்ததெல்லாம் முடிஞ்சுது. தேவையெண்டால் அடுத்த மாதத்திலயிருந்து எடுக்கலாம்' எண்டு கடைக்காரர் சொன்னார். 'உங்களுக்கெப்பிடி மல்லிகை வருகுது?' எண்டு கேட்டன். அப்பதான் அவர் விசயத்தைச் சொன்னார். "இப்ப தினகரன் எடிட்டராயிருக்கிற ராஜஸ்ரீகாந்தன் என்ர மூத்தண்ணர்தான். டொமினிக் ஜீவாவோட வலுநெருக்கம் எண்டபடியால்தான் மல்லிகை இஞ்சவருகுது. அதுமட்டுமில்லை மல்லிகைப்பந்தல் வெளியீடுகளும் வருகுது' எண்டு அதுகளையும் காட்டினார்.

35

நான் அங்கைதான் ஐ. சாந்தனின் "எழுதப்பட்ட அத்தியாயங்கள்" குறுநாவல் தொகுப்பையும் வாங்கினன். அந்த மூட்டந்தான் யாழ். பல்கலைக்கழகம் டொமினிக் ஜீவாவுக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிறதாக அறிவிச்சுது. டொமினிக் ஜீவா அதை வாங்க மறுத்திட்டார். இது சம்பந்தமா நான் மல்லிகைக்கு ஒரு கடிதம் எழுதினன். அது மல்லிகையில பிரசுரமாச்சுது. பிறகு மல்லிகைக்கு ஒரு கதையும் எழுதி அனுப்பினன். அது பிரசுரமாகேல்ல. அப்ப நான் பின்னேரங்களில அல்லாட்டில் காலமை தெணியான் வீட்டையும் அடிக்கடி போறனான். அப்பிடி ஒருக்கால் போகேக்குள்ள தெணியானிட்ட மல்லிகைக்குக் கதை அனுப்பினதைப் பற்றிச் சொன்னன்.

அதுக்கு அவர், "தம்பி! உம்மட கதை ஜீவாவுக்கு விளங்காது. நான் ஜீவாவுக்கு ஒரு சிபார்சுக் கடிதம் எழுதித்தாறன். அதைச் சேர்த்துவைச்சு அந்தக் கதையை திரும்ப அனுப்பும். ஆள் உடனை மல்லிகையில போட்டுடும்" எண்டு சொன்னார். பிறகு நானும் அதில ஆர்வங்காட்டேல்ல. மல்லிகையில என்ரகதையும் வரயில்லை, எந்தச் சிபார்சுமில்லாமல் நானா அனுப்பி ஒரு சஞ்சிகையில அது பிரசுரமாகிறதில இருக்கிற சந்தோசம் வேறொண்டிலயுமில்லை.

(தொடரும்)

12



# கற்கண்டு ஓடை

(Cat Gun - Do or Die)

திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை

கதை: இ.சு.முரளிதரன்
வரைகலை - மகேந்திரன் வினித்




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org